த்தங்கள்: புன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

7 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 17 திங்கட்கிழமை (01-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:218

# காவலர்களைப் பணயம் வைத்துவிட்டு தங்காலைச் சிறைச்சாலையில் ஆயுதக் களஞ்சியம் உடைப்பு!

## கைதிகள் - படையினர் கடுஞ்சண்டை தப்பிச் செல்வதைத் தடுக்க ஊரடங்கு!

தங்காலை,ஜூலை1

ங்காலைச் சிறைச்சாலையின் தீவிர பாதுகாப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் றுப்பிற்பகல் திடீரென அங்குள்ள ஆயுதக் களஞ்சியத்தைத் தாக்கி உடைத்து அங்கிருந்த பாக்கிகளைச் சூறையாடிக்கொண்டு பெரும் தாக்குதலை ஆரம்பித்திருக்கின்றனர்.

கைதிகளால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கும் சிறைக்காவலர்களைப் பாதுகாப்பாக மீட்கவும், கைதிகள் ோடுவதைத் தடுக்கவும் பெரும் எண்ணிக்கையான படையினர் சிறைச்சாலையைச் சூழ பட்டிருக்கின்றனர். அந்தப் பிரதேசத்தில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 3 மணிமுதல் ... பிரதேசம் துப்பாக்கி ...லியால் அதிர்ந்து கொண் டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இராணுவத்தினர், விமானப் படையினர், கடற்படையினர் மற்றும் பொலீஸார் சிறைச்சாலையைச் சூழ குவிக கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன. விமானப் படை ஹெலிகொப்டர்கள் வான்வழி கண்காணிப்பில் ஈடுபட்டிருக்கின்றன.

சிறைப்பிடிக்கப்பட்டிருப்போரைப் பாதுகாப்பாக மீட்பதற்காக கொழும்பில் இருந்து விசேட கொமாண்டோ படை அணி ஒன்று தங்காலைக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு நீடிப்பு

மட்டக்களப்பு கல்குடா தேர்தல் தொகுதியில் நேற்றுக்காலை 6மணி முதல் இன்று காலை 6மணிவரை ஊரடங்கு அமுல்செய்யப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் நேற்று இரவு 8 மணிக்கு அமுலுக்கு கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 6 மணிக்கு நீக்கப்படும்.

இதேவேளை -

வாழைச்சேனை சம்பவங்கள் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சு இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## லகக் கிண்ணத்தை ரேஸில் வென்றது!



...ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் ...ற கோல் கணக்கில் ஜேர்மன் அணியை வென்று பிரேஸில் வெற்றி ...ஈட்டியிருக்கிறது. பிரேஸில் அணியின் வீரர் வெற்றிக்களிப்புடன் உலகக் ...ணத்தை முத்தமிட்ட காட்சி. கோலாகலமாக நடந்த இறுதியாட்ட நிகழ் ...வுகள் மற்றும் விரிவான செய்திகளுக்கு இரண்டாம் பக்கத்தை ...ர்க்க.

## கிழக்கில் அமைதி திரும்புகிறது நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

### புலிகள் - முஸ்லிம் காங்கிரஸ் பேச்சு 3ஆம் திகதி

வாழைச்சேனை,ஜூலை1

கிழக்கில் வன்செயல்கள் ஓய்ந்து அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையில் எதிர்வரும் மூன்றாம் திகதி மூதூர் சம்பூரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையே பேச்சுக்கள் நடைபெற இருக்கின்றன.

வாழைச்சேனை பிரதேசத்தில் ஏற்பட்ட உயிர், உடைமை இழப்புகளுக்கு உரிய இழப்பீடு வழங்கப்படும். இழப்பீடுகள் வழங்குவதற்கான உறுதிமொழியை பிரதமர் ரணில் வழங்கியிருக்கிறார் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராய ரவூப் ஹக்கீம் சனிக்கிழமை மாலை இங்கு விஜயம் செய்தார். ஜும்மா பள்ளிவாசலில் அவர் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

இக்கலந்துரையாடலின்போது உரையாற்றிய அமைச்சர் ஹக்கீம், வாழைச்சேனை பிரதேசத்தில் தமது உயிர், உடைமைகளை இழந்த அனைவருக்கும் உரிய இழப்பீடுகள் வழங்கப்படும் என்று சொன்னார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மிகவிரைவில் அமைச்சர்கள், அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று இப்பிரதேசத்துக்கு அனுப்பப்படும். நாளையும் நாளைமறுதினமும் இக்குழுவினர் திருகோணமலை, மட்டக்களப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

#### சமாதானக் குழுவினர் புலிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை1

சமாதானப் பயணம் மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த சர்வ சமய சமாதானக்குழுவின் பிரதிநிதிகள் நேற்றுக்காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பணிக் குழுவினரைச் சந்தித்தனர்.

கொக்குவிலில் உள்ள அரசியல் துறை அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் புலிகளின் பிரதிநிதிகள் தற்போதைய சமாதானச் சூழ்நிலை குறித்தும், புரிந்துணர்வு உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் அரசு காட்டிவரும் தாமதங்கள் பற்றியும் சமாதானக் குழுவினருக்கு சுட்டிக் காட்டினர்.

சமாதானக் குழுவின் தலைவர் சங்கைக்குரிய பாகம் பாகம அஸாஜி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கனடா கார் விபத்தில் தமிழ் தம்பதியர் பலி!

ரொறன்ரோ,ஜூலை1

கனடாவின் ரொறன்ரோ பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார் விபத்தில் யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த தமிழ்த் தம்பதியர் இருவர் உயிரிழந்தனர்; இருவர் படுகாயங்களுக்குள்ளாகினர்.

நீண்டகாலமாக அமெரிக்காவில் வசித்து வந்தவர்களான நாகலிங்கம் சுப்பிரமணியம் (வயது 69), சுப்பிரமணியம் செல்வமலர் (நோனா-வயது 55) ஆகிய இருவருமே உயிரிழந்தனர். கனடாவில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய வழியில் இவர்கள் பயணம் செய்த கார் விபத்துக்குள்ளானதாகக் கூறப்படுகின்றது.

இருவரும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 24மணி நேர மின்விநியோகம்; இன்று பரீட்சார்த்த ஆரம்பம்!

யாழ்ப்பாணம்,ஜூலை1

சுன்னாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மின் நிலையத்தின் மூலம் யாழ். குடாநாட்டுக்கான 24மணி நேரப் பரீட்சார்த்த மின் விநியோகம் இன்று முதல் ஆரம்பமாகின்றது.

இந்தப் பரீட்சார்த்த விநியோகம் கட்டம், கட்டமாக நான்கு தினங்களுக்கு வழங்கப்படும் என்றும் -

பரீட்சார்த்த விநியோகத்தின் போது புதிய மின் பிறப்பாக்கிகள், மின் மாற்றிகளின் இயக்கம் மற்றும் அவற்றின் செயற்றிறன் குறித்து அவதானிக்கப்படும் என்றும் -

மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கிடையில் -

யாழ். குடாநாட்டிற்கான 24 மணி நேர மின் விநியோகத்தை எதிர்வரும் 7ஆம் திகதிக்குப் பின்னரே முழு அளவில் ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்று மின்சார சபையின் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளர் எஸ். முத்துரட்ணானந்தன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

(எ)

## ...கத்தில் புலிகள் மாநாடு!

யாழ்ப்பாணம்,ஜூலை1

...லைப் புலிகளின் யாழ். ...ரசியல் பணிக்குழுவினர் ...கத்தில் மாநாடு ஒன்றை ...மக்களுக்கான அரசியல் ... அங்கு ஆரம்பிப்பது தொடா ...ந்துரையாடினர். ... அரசியல்துறைப் பொறுப் ...ம்மனன் ஏற்பாடு செய்த இந்த மாநாடு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

மக்களுக்கான அரசியல் பணிகளை முன்னெடுக்கும் வழிமுறைகள் தொடர்பாக அங்கு ஆராயப்பட்டு தீர்

(12ஆம் பக்கம் பார்க்க)

...ளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




சம்பா அழகிகள்

# பிரேஸிலுக்கு இனிய இரவு!


ஜேர்மனிய இளசுகள்

டோக்கியோ,ஜூலை1

பின்பாதி ஆட்டத்தில் ரொனால்டோ அடித்த அபாரமான இரு கோல்கள் மூலம் ஐந்தாவது தடவையாகவும் பிரேஸில் உலகக் கிண்ணத்தை வென்று வரலாற்றுச் சாதனை படைத்தது.

நேற்று ஜப்பானின் யோஹகாமா மைதானத்தில் நடந்த இறுதி ஆட்டத்தில் 2-0 என்ற கோல் அடிப்படையில் ஜேர்மனியை வென்று 1998இல் ஏற்பட்ட தோல்விக்குப் பழிதீர்த்துக் கொண்டது பிரேஸில். அந்தப் போட்டியில் ரசிகர்களின் எதிர்பார்ப்பை ஏமாற்றிய ரொனால்டோ, நேற்றைய இறுதி ஆட்டத்தில் அவர்களுக்கு மகிழ்ச்சியை வாரி வழங்கினார்.

இதன்மூலம் கடந்த ஒருமாத காலமாகத் தொடர்ந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ஒருவாறு முடிவுக்கு வந்தது.

இந்த ஆட்டத்தில் இரு கோல்களை அடித்ததன் மூலம் உலகின் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரர் தான்தான் என்பதை மீண்டும் நிலைநாட்டினார் ரொனால்டோ. இந்தப் போட்டித் தொடரில் அவர் மொத்தமாக 8 கோல்களை அடித்தார். இதன்மூலம் அதிக கோல் அடித்த வீரருக்கான தங்கப் பாதணி விருதையும் அவர் வென்றார்.

நேற்றைய ஆட்டம் ஜேர்மன் - பிரேஸில் அணிகளிடையேயானது என்பதைவிட ரொனால்டோ மற்றும் ஒலிவர் கான் ஆகிய இரு தனிப்பட்ட நபர்களிடையேயான பலப்பரீட்சை என்று சொன்னாலும் தப்பில்லை.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் மிக விறுவிறுப்பாக நடந்தது. ஆனாலும், பிரேஸிலுக்கு நிகரான அணி என கருதப்பட்ட ஜேர்மனியின் ஆட்டம் நேற்றுப் பெருமளவில் சோபிக்கவில்லை இடையிடையே பிரேஸிலுக்கு அச்சுறுத்தலை அவர்கள் ஏற்படுத்தியதுடன் சரி. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் கிடைத்த மிக மிக அருமையான சந்தர்ப்பம் ஒன்றைத் தவற விட்டார் ரொனால்டோ. அவர் உதைத்த பந்து கோல்கம்பங்களை விட்டு விலகிச் சென்றது. முன்பாதி ஆட்டத்தில் கிடைத்த கட்டுப்பாடற்ற உதை ஒன்றையும் அவர் கோலாக்கத் தவறினார். 44ஆவது நிமிடத்தில் பிரேஸில் வீரர் கில்பேர்ஸன் அடித்த பந்து ஜேர்மனிய கோல்கம்பத்தில் பட்டுத் தெறித்தது. முன்பாதி ஆட்டத்தில் எந்த அணியும் கோல் அடிக்கவில்லை.

பின்பாதி ஆட்டம் ஆரம்பித்த மூன்றே நிமிடங்களில் - ஆட்டத்தின் 48ஆவது நிமிடத்தில் - ஜேர்மனிய வீரர் நியுவில்லி உதைத்த கட்டுப்பாடற்ற உதை பிரேஸில் கோல்கம்பத்தில் பட்டுத் தெறித்தது.

ஆட்டத்தின் 67ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்திய முதலாவது கோலை ரொனால்டோ அடித்தார். அவரது சகாவான ரிவால்டோ அபாரமாக, வேகமாக உதைத்த பந்தை பாய்ந்து இலகுவாகப் பிடித்தார் ஜேர்மனி கோல் காப்பாளர் ஒலிவர் கான். ஆனால், பந்து எதிர்பாராதவிதமாக அவரது கையை விட்டு நழுவியது. நழுவி உருண்டு ஓடிவந்த பந்தை நோக்கிப் பாய்ந்த ரொனால்டோ அதனை அபாரமாக கோல் கம்பங்களுக்குள் தட்டிவிட்டார்.

அடுத்த 12 நிமிடங்களில் - ஆட்டத்தின் 79 ஆவது நிமிடத்தில் - மீண்டும் ஒரு கோலை அடித்து ஜேர்மனை அதிர்ச்சியில் உறைய வைத்தார் ரொனால்டோ. சகவீரர் இடம் இருந்து கிடைத்த பந்தை அற்புதமாக ஒரு பக்கக் கால் (Side - foot) உதை மூலம் கோலாக்கினார் அவர். ஆட்டம் பிரேஸில் பக்கம் சாய ஆரம்பித்தது. வெற்றி அந்த அணிக்கே என்ற நிலை ஏற்பட்டது. ஆனாலும் பலம்வாய்ந்த ஜேர்மனிய அணி எந்த நேரத்திலும் கோல் அடிக்கலாம் என்ற அச்சத்தில் இறுதிவரை பிரேஸில் வீரர்கள் எச்சரிக்கையாகவே ஆடினார்கள்.

ஜேர்மனுக்கு கிடைத்த சில அரிய சந்தர்ப்பங்களை வீரர்கள் சரியாகப் பயன்படுத்தாததால் நான்காவது முறையாக கிண்ணத்தைக் கைப்பற்றும் அவர்களது கனவு நனவாகாமலேயே போனது. ஐந்தாவது தடவையாகவும் கிண்ணத்தை வென்று பிரேஸில் சாதனை படைத்தது. வெற்றிக்கிண்ணத்தை கையில்பெற்ற பிரேஸில் தலைவர் கபூல் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். பிரேஸில் நாடு முழுவதுமே ஆனந்தத்தில் பூரித்துப் போனது. (ம)

ஜப்பான் தென்கொரியா
**உலகக் கிண்ண காற்பந்து**
2002 FIFA WORLD CUP KOREA JAPAN
31.05.2002 - 30.06.2002

# சிறந்த கோல்காப்பாளர் விருது ஜேர்மன் தலைவர் கானுக்கு!

டோக்கியோ,ஜூலை1

நேற்றுடன் முடிந்த 17ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் மிகச் சிறந்த கோல்காப்பாளருக்கான லேவ் யஸின் விருது ஜேர்மனிய கோல்காப்பாளரும் அணித் தலைவருமான ஒலிவர் கானுக்குக் கிடைத்துள்ளது.


நேற்றைய ஆட்ட முடிவில் கதறி அழும் கான்


FIFAயின் தொழில்நுட்பவியலாளர்கள் குழு, நடந்து முடிந்த ஆட்டங்களின் வீடியோ நாடாக்களைப் பரிசீலித்த பின்னர் இந்த விருதுக்கு கானைத் தெரிவு செய்தது. நேற்றைய இறுதி ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்னரே இவ்விருது அறிவிக்கப்பட்டு விட்டது.

33 வயதாகும் ஒலிவர் கான், உலகக் கிண்ணப் போட்டியில் இறுதி ஆட்டத்துக்கு முன்னர் 6ஆட்டங்களில் ஆடியிருந்தார். எனினும் ஒரு கோலையே விட்டுக்கொடுத்திருந்தார். பிரிவு'E'யில் அயர்லாந்துடனான ஆட்டத்தின்போது அந்த அணி வீரர் ரொப்பீ கீனே ஜேர்மனிக்கு எதிராக ஒரு கோலை அடித்தார். கானைத் தாண்டி பந்தைச் செலுத்திய ஒரே வீரராக இருந்தார்.

ஆனால், இறுதி ஆட்டத்தின்போது பிரேஸில் வீரர் ரொனால்டோ அந்தப் பெருமையைத் தட்டிக்கொண்டார். கானைத் தாண்டி அவர் இரு கோல்களை அடித்தார். இதன் மூலம் இப் போட்டித் தொடரில் கான் [illegible] கோல்களை [illegible]கொடுத்தவரானார்.

எனினும், சீறிவரும் பந்துகளைப் பாய்ந்து தடுப்பதில் கானுக்கு நிகர் அவரே என்று புகழாரம் சூட்டுகின்றார் ஜேர்மன் அணியின் பயிற்சியாளர்.

1998ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின்போது பிரான்ஸ் கோல்காப்பாளர் பபீன் பார்த்ஸ் இந்த விருதைப் பெற்றிருந்தார். (ம)


ரொனால்டோ மற்றும் ரிவால்டோ

# கோலாகல நிகழ்வுகளுடன் ஆரம்பித்த இறுதி ஆட்டம்

டோக்கியோ,ஜூலை1

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் ஜப்பானின் இரண்டாவது பெரிய நகரமான யோஹகாமாவின் மைதானத்தில் நேற்று மாலை கோலாகலமாக ஆரம்பமானது.

ஜப்பானிய பாரம்பரிய முறைப்படி ஆட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜப்பானிய இளம் பெண்களின் பாரம்பரிய நடனம் மற்றும் பாரம்பரிய இசை நிகழ்வுகள் என்று நிகழ்வு முழுமையும் களைகட்டின.


ஆட்டம் ஆரம்பமான தருணத்திலேயே மைதானம் மக்கள் சமுத்திரத்தால் நிறைந்திருந்தது. உலகெங்கிருந்தும் வந்திருந்த 70 ஆயிரத்து 600 பேர் மைதானத்தில் கூடியிருந்தனர். சுமார் 17கோடிப் பேர் உலகின் பல நாடுகளிலும் தொலைக்காட்சி மூலம் இந்த இறுதிஆட்டத்தைக் கண்டு களித்தனர். இது ஒரு வரலாற்றுப் பதிவு என்று கூறப்படுகின்றது.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் நேற்றைய ஆட்டம் ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாகும். 72 வருட காலத்தில் முதற்தடவையாக ஜேர்மனியும் பிரேஸிலும் இறுதி ஆட்டத்தில் சந்தித்துக்கொண்டன. இதுவே இந்த ஆட்டம் குறித்த மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. கோடிக்கணக்கான மக்களை ஜப்பான்நோக்கித் திரும்பிப் பார்க்க வைத்தது. (ம)


இறுதியாட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் பொப் இசைப்பாடகி அனாஸ்ரிக்கா பாடும் காட்சி.



# இந்தியத் துணைப் பிரதமராக எல்.கே.அத்வானி நியமனம்



புதுடில்லி,ஜூலை1

இந்தியாவின் துணைப் பிரதமராக மத்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி நியமிக்கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் இரவு இந்திய குடியரசுத் தலைவர் அலுவலகம் உத்தியோகபூர்வமாக அறிவித்தது. இந்தியாவில் 12 ஆண்டுகளின் பின்னர் துணைப் பிரதமர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

துணைப் பிரதமராகப் பொறுப்பேற்கும் அத்வானி தொடர்ந்து உள்துறை அமைச்சகப் பொறுப்பையும் கவனிப்பார்.

பிரதமர் வாஜ்பாயின் உடல்நிலை சீரற்று இருப்பதாகக் கூறப்படும் நிலையில் துணைப் பிரதமர் பதவி உருவாக்கப்பட்டு அத்வானிக்கு வழங்கப்பட் டுள்ளது.

ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்தபோது முதன் முறையாக துணைப் பிரதமர் பதவி ஏற்படுத்தப்பட்டு சர்தார் வல்லபாய் படேலுக்கு அப்பதவி வழங்கப்பட்டது.

பின்னர் இந்திராகாந்தி அமைச்சரவையில் மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமராக இருந்தார். மொரார்ஜி தேசாய் பிரதமரானபோது சரண் சிங்கும், ஜெகஜீவன் ராமும் துணைப் பிரதமர்களாக இருந்தனர். வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது தேவிலால் துணைப் பிரதமரானார். பின்னர் அவர் நீக்கப்பட்டபோதும் அடுத்து சந்திர சேகர் பிரதமரான போது தேவிலால் துணைப் பிரதமரானார்.

பெரும்பாலும் அரசியல் தலைவர் களிடையேயான போட்டிகளை சமாளிக்கவே, துணைப் பிரதமர் பதவி இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

ஆனால், முதல் தடவையாக தற்போதுதான் பிரதமரின் வேலைப்பளுவைக் குறைக்கும் விதத்தில் துணைப் பிரதமர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ)

# குரோஷியாவில் முதற்றடவையாக ஓரினச் சேர்க்கையாளர் பேரணி!

லண்டன்,ஜூலை1

குரோஷியாவில் முதன்முறையாக ஓரினச் சேர்க்கையாளர்கள் திரண்டு பேரணி ஒன்றை நடத்தினர்.

தலைநகர் ஜக்ரெப்பில் இடம்பெற்ற இந்தப் பேரணி பலத்த பொலீஸ் பாதுகாப்பின் மத்தியில் இடம்பெற்றது. பேரணியில் கலந்து கொள்பவர்கள் அருவெறுக்கக்கூடிய செயல்களில் ஈடுபடலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.



பேரணியில் ஒரு பகுதியினரும் கலகம் அடக்கும் பொலீஸாரும்

இது குறித்துப் பேரணி ஏற்பாட்டாளர்கள் கூறுகையில் -

'நிர்வாணமாக நடனமாடுவதோ, அல்லது அதுபோன்ற வேறு அசிங்கமான செயல்களில் ஈடுபடுவதோ எமது நோக்கமல்ல. எமது உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியே பேரணி நடத்துகிறோம்' என்றனர்.

இதேசமயம் பேரணி சென்ற பாதையின் இருபுறங்களிலும் நின்றவர்கள் பேரணியில் சென்ற ஓரினச் சேர்க்கையாளர்களைப் பார்த்து ஏளனம் செய்து அத்துமீறி நடக்க முயற்சித்ததாகவும் -

அவர்களை பொலீஸார் தடியடி நடத்தி கலைக்க நேரிட்டதாகவும் -

கூறப்படுகிறது.

குரோஷிய உள்துறை அமைச்சர் சிமி லூசின் உட்பட சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

சாதாரண தம்பதிகளுக்கு உள்ள அனைத்து உரிமைகள் மற்றும் அங்கீகாரங்கள் ஓரினச் சேர்க்கைத் தம்பதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று பேரணியில் வலியுறுத்தப்பட்டது.

குரோஷியாவில் ஓரினச் சேர்க்கைக்கு எதிராக மிகக் கடுமையான சட்ட விதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# பா.ஜ.க. தலைவராக வெங்கையாநாயுடு?

புதுடில்லி,ஜூலை1

இந்தியாவில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவராக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் வெங்கையாநாயுடு நியமிக்கப்படலாம் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜனா கிருஷ்ணமூர்த்தி தலைவர் பதவியிலிருந்தபோது அவரின் கீழ் பணியாற்ற பாரதய ஜனதாவின் வட இந்தியத் தலைவர்கள் மறுப்புத் தெரிவித்ததையடுத்து ஜனா கிருஷ்ணமூர்த்தி கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

இந்த நிலையில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வெங்கையா நாயுடுவைப் பாரதிய ஜனதாக் கட்சிக்குத் தலைவராக்க வட இந்தியத் தலைவர்கள் சம்மதித்திருப்பதாகக் கூறப்படுகிறது. வெங்கையா நாயுடுவின் தாய்மொழி தெலுங்காகும்.

இதேசமயம், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் நிதியமைச்சராகவும், நிதியமைச்சர் ஜஷ்வந்த் சிங்ஹா வெளியுறவுத்துறை அமைச்ச்ராகவும் மாற்றப்படலாம் என்றும் கூறப்படுகிறது. (ஒ)

## பிலிப்பைன்ஸ் வெளியுறவு அமைச்சர் ராஜினாமா!

மணிலா,ஜூலை1

பிலிப்பைன்ஸ் தென்பகுதியில் முஸ்லிம் தீவிரவாதிகளை அடக்குவதற்கு பயிற்சி கொடுப்பதற்காக, அமெரிக்கப் படையினர் வந்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிலிப்பைன்ஸ் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் டியோபிஸ்டோ கய்னோனா தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இவரது ராஜினாமாவை பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியோ அர்ரோயோ ஏற்றுக்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

டியோபிஸ்டோ பிலிப்பைன்ஸ் நாட்டின் துணை அதிபராகவும் பதவி வகித்து வருகிறார். (ம-9)

# அமெரிக்க அதிபரின் பொறுப்பு தற்காலிகமாக கைமாறுகிறது

வாஷிங்ரன்,ஜூலை1

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு.புஷ் தனது பொறுப்புக்களை தற்காலிகமாக துணை அதிபர் டிக் செனியிடம் ஒப்படைக்கிறார்.

புஷ்ஷிற்கு பெருங்குடலில் கட்டிகள் உருவாகியிருப்பதாக மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பாக 'லோனோஸ் கோபி' முறை மூலம் புஷ்ஷிற்கு மருத்துவ பரிசோதனை செய்யப்படவுள்ளது. 'காம் டேவிட்' இராணுவ மருத்துவமனையில் நடைபெறவுள்ள இந்தப் பரிசோதனையின்போது புஷ்ஷுக்கு மயக்க மருந்து செலுத்தப்படும்.

ஆகவே, அதிபர் மயக்க நிலையில் இருக்கும்போது அரசியல் மற்றும் சட்டப் பிரச்சினைகள் ஏதும் உருவாகிவிடாது இருப்பதற்காகவே துணை அதிபர் டிக் செனியிடம் தனது பொறுப்புக்களை தற்காலிகமாக அதிபர் புஷ் ஒப்படைக்கிறார்.

-'இப்போது நாங்கள் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் இருக்கிறோம். அதனால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டியுள்ளது. மருத்துவ சோதனையின்போது நான் மயக்க நிலையில் இருப்பதால் அந்த நேரத்திற்கான அதிபர் பொறுப்பை துணை அதிபரிடம் ஒப்படைக்கின்றேன்' என்று அதிபர் புஷ் விளக்கமளித்துள்ளார்.

அதிபர் உயிருடன் இருக்கும்போதே துணை அதிபர் பதவியை ஏற்பது அமெரிக்காவில் இது இரண்டாவது தடவையாகும். இதற்கு முன்னர் 1985 ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் ரொனால்ட் ரீகன் புற்றுநோய்க்காக அறுவை சிகிச்சை செய்துகொண்டபோது துணை அதிபர் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



மேற்குக்கரையின் ஹெப்ரான் நகரில் பலஸ்தீன உள்ளூர் தலைமையகக் கட்டடத்தைத் தகர்த்து தரைமட்டமாக்கிய இஸ்ரேலியப் படையினர், இடிபாடுகளுக்கிடையில் பலஸ்தீனர்களின் உடல்களைத் தேடுவதைப் படத்தில் காணலாம்.

# இரு இந்திய மாநிலங்களில் வெள்ளத்துக்கு 120 பேர் பலி!

புதுடில்லி,ஜூலை1

இந்தியாவில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களில் பெய்துவரும் பலத்த மழையினால் 120 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

சாலைகளில் நீர்தேங்கி உள்ளமையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. நீண்ட தூர ரயில் சேவைகள் வெள்ளம் காரணமாக ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

குஜராத்தில் தொடர்ந்து நான்காவது நாளாகப் பெய்த பலத்த மழையினால் 49 பேர் உயிரிழந்துள்ளார்கள். 11 ஆயிரத்திற்கும் அதிகமானோர் இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

மேற்கு வங்காளத்தில் கடந்த 48 மணித்தியாலமாக இடம்பெற்றுவரும் அடைமழையால் இருவர் உயிரிழந்துள்ளனர். (ஒ-12)

## சூடான் நாட்டு எல்லையில்

# எதியோப்பிய படையுடன் தீவிரவாதிகள் மோதல்!

லண்டன்,ஜூலை1

ஆபிரிக்க நாடான எதியோப்பியாவில் அரசுப் படைகளுக்கும் 'ஓரோமோ' விடுதலை முன்னணித் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுவருகிறது.

அயல் நாடான சூடானில் இருந்து எதியோப்பியாவுக்குள் ஜிகாவோ பகுதியூடாக நுழைய தீவிரவாதிகள் அணி ஒன்று முயற்சித்ததாகவும் -

இதனைத் தடுக்கும் முயற்சியில் அரசுப் படைகள் ஈடுபட்டபோதே மோதல் வெடித்ததாகவும் -

எதியோப்பிய இராணுவத் தளபதி



எதியோப்பிய நாட்டுப் படையினர்

மேஜர் ஜெனரல் பச்சா டெபேலே தெரிவித்தார்.

கடந்த இருவாரங்களில் அரசுப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெறும் இரண்டாவது மோதல் சம்பவம் இதுவாகும். எதியோப்பிய சனத் தொகையில் 50 வீதமாக உள்ள 'ஒரோமா' இனத்தவரின் உரிமைகளைக் காப்பதற்காக கடந்த 9 ஆண்டுகளாக போராடிவரும் 'ஒரோமா' விடுதலை முன்னணி தற்போது பிரதமர் மெலஸ் ஜெனாவி அரசுக்கு எதிராக 'ஒரோமா' பிரதேசத்தை தனிநாடாக்கக் கோரி போராடிவருகிறது.

தற்போதைய மோதலில் 425 எதியோப்பிய இராணுவத்தினரை கொன்று 250 பேரை காயப்படுத்தியுள்ளதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். இதேசமயம் இரண்டு தீவிரவாதிகளின் சடலங்களைத் தாம் கைப்பற்றியுள்ளதாக எதியோப்பிய இராணுவம் கூறியுள்ளது. (ஒ)

# 72வயது கொள்ளைகாரருக்கு லண்டன் சிறையில் திருமணம்

லண்டன்,ஜூலை1

பிரிட்டிஷ் தலைநகர் லண்டன் அருகில் உள்ள பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பிரிட்டனைச் சேர்ந்த பிரபல கொள்ளைக்காரர் ரோனி பிக்ஸ் இம்மாதம் 10ஆம் திகதி திருமணம் செய்து கொள்ளப்போகிறார்.

72வயதான ரோனி, தன் பிரேஸில் காதலியான ரைமுன்டா ரோதமை திருமணம் செய்யவுள்ளார். ரோனி சிறைவைக்கப்பட்டுள்ள பெல் மார்ஷ் சிறையிலேயே இத்திருமணம் நடைபெறுகிறது.

கொள்ளைக்காரர் ரோனியும் அவரது கும்பலும் 1963ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் இருந்து லண்டன் சென்றுகொண்டிருந்த ரயிலில் 16 கோடி ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்தனர். பின்னர் பொலீஸார் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். ஆனால் ரோனி சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்று பிரேஸில் நாட்டில் தலைமறைவாக வாழ்ந்தார். பின்னர் மீண்டும் 2001ஆம் ஆண்டு லண்டன் திரும்பினார்.

தான் சாவதற்கு முன்னர் பிரிட்டனில் உள்ள பிரபல மதுக்கடை ஒன்றில் மது அருந்தவேண்டும் என்ற தனது ஆசையை நிறைவேற்ற லண்டன் திரும்பிய ரோனியை பிரிட்டிஷ் பொலீஸார் ரயில் நிலையத்தில் வைத்து மடக்கி லண்டன் அருகில் உள்ள பெல்மார்ஷ் சிறையில் அடைத்தனர். அங்கே அவருக்கு பக்கவாத நோய் ஏற்பட்டு வாய் பேசமுடியாதுள்ளார்.

இந்நிலையில் ரோனியின் பிரேஸில் காதலி, அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பி பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் மனுச்செய்திருந்தார். இதனை பிரிட்டிஷ் அதிகாரிகள் ஏற்றுக்கொண்டதையடுத்தே இந்தத் திருமணம் இடம்பெறுகிறது. (ஒ-8)

# மேற்குக்கரை நகர்களில் 40 பலஸ்தீனர்கள் கைது!

ஜெருசலேம்,ஜூலை1

இஸ்ரேலியப் படைகள் மேற்குக் கரை நகரங்களில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது 40 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 3பேர் ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என இஸ்ரேல் கூறியது.


மேற்குக்கரையின் வடபகுதியில் உள்ள ஹெப்லஸ், துர்கராம் ஆகிய நகரங்களில் 10 பலஸ்தீனத் தீவிரவாதிகளை தாம் கைதுசெய்ததாக இஸ்ரேலிய ராணுவம் கூறியது.

இதற்கிடையில் -

மேற்குக்கரையின் பலஸ்தீனப் பகுதிகளில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட 10 யூதக் குடியிருப்புக்களை அகற்றி விடும்படி இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் பினிய மின் பென் எலிஸர் உத்தரவிட்டுள்ளார். 24 மணித்தியாலங்களுக்குள் அந்தக் குடியிருப்புக்கள் அகற்றப்படவேண்டும் என்றும் எலிஸர் குறிப்பிட்டார்.

இதேசமயம் இந்த உத்தரவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த யூதர்கள், குறிப்பிட்ட பகுதியில் யூதர்களுக்கு உள்ள உரிமை பைபிளில் கூட வலியுறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தனர். (ஒ-12)

# இன்று உங்களுக்குப் பிறந்தநாள்



பிறப்பு
01
07
1938

இறப்பு
11
08
2001

அமரர்

## பொன்னையா சங்கரப்பிள்ளை J.P.

*(முன்னாள் அதிபர், உடுத்துறை ம.வி.)*

அன்புத் தெய்வமே!

*அன்புடனே ஆதரித்து எம்மை வளர்த்தவரே*
*எங்கள் அன்பான பிறந்தநாள் வாழ்த்துக்கள் உங்களுக்கு!*
*எங்களுடனே நீங்கள் வாழ்ந்த நாள்களும்*
*எங்கள் ஏற்றமான வாழ்வுக்கான உங்கள் முயற்சியும்*
*எங்களுடனே என்றும் மனதில் நிலையாய் நிற்கின்றன*
*மருத்துவத்தை நம்பி கொழும்புக்குச் சென்றோம் - பலனில்லை*
*கடவுளைக் கையெடுத்தோம் கடைசியில் - கைவிடப்பட்டோம்*

*எமது குடும்ப விளக்காய் இருந்து - எமக்கு*
*முன்னேற்றத்தைத் தந்தீர்கள் - ஆனால்*
*அவற்றையெல்லாம் நீங்கள் பார்த்து மகிழ்ந்து - வாழ*
*பொறுக்காத இறைவன் தன்னுடனே*
*அழைத்துச் சென்று விட்டாரே.*

உங்கள் பிறந்த நாளில் - இன்று
உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

தகவல்:
பெ.திரவியநாதன்
(மைத்துனர்)
தெ.மராட்சி கிழக்கு ப.நோ.கூ.ச.
மருதங்கேணி.

என்றும் உங்கள் அன்பான
மனைவி, மகள், மருமகன்,
மைத்துனரும்
குடும்பத்தினரும். (5395)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## சி.அழகரத்தினம்

(ஓய்வுபெற்ற பிரதம தபால் அதிபர்)

அன்னை மடியில்
26 ★ 10 ★ 1926

ஆண்டவன் அடியில்
01 ★ 07 ★ 1986

*பூவிழந்த மனையாளும் பொலிவிழந்து போனோர்*
*ஆவிழந்த கன்றாகி நாமும் - துவண்டு போனோம்*
*பாராட்டிச் சீராட்டி பக்குவமாய் எமை வளர்த்தீர்*
*பாரினில் நாம் யாரை அப்பா என அழைப்போம்?*

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (5336)

பிரிவால் துயருறும்:
மனைவி, மைத்தர்கள்.

## கருவைக் கலைக்க முயன்ற பெண் ஆபத்தான நிலையில்

தென்மராட்சி,ஜூலை1

நாற்பத்தொரு வயதில் கர்ப்பம் தரித்த பெண் ஒருவர் கருவைக் கலைக்க முயன்றதால் ஆபத்தான நிலையை அடைந்தார்.

கருக்கலைப்பு முயற்சியில் அதி களவு இரத்தப்பெருக்கு ஏற்பட்ட நிலையில் அந்தப் பெண் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

கரவெட்டிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பெண்மணிக்கு பேரக்குழந்தைகள் இருப்பதாகவும் -

இந்த நிலையில் கருத்தரித்த தனை அவமானமாக நினைத்தே மேற்படி பெண் கருக்கலைப்பு முயற்சியில் ஈடுபட்டதாகவும் -

கூறப்படுகிறது. (ஒ-117)

## நிர்மாண ஒப்பந்தகாரர்களை பதியக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை1

இலங்கைத் தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் சங்கத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிர்மாண ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் கேட்டுள்ளார்.

எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகள் அனைத்தும் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட இருப்பதால் நிர்மாண ஒப்பந்தகாரர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதை உறுதி செய்வதற்காகவே பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ம-12)

## குளிக்கச் சென்று பற்களை இழந்த குடும்பப் பெண்

தென்மராட்சி,ஜூலை1

குளிக்கச் சென்ற குடும்பப் பெண் கிணற்றில் தவறி வீழ்ந்து பற்களை இழந்த சம்பவம் நேற்றுமுன்தினம் துன்னாலை கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த கிட்டினன் சன்னதி(வயது 50) என்பவரது மேற்படி சம்பவத்தில் காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (எ-117)


### தேவை

*மின்சார உபகரணங்கள் விற்பனை செய்வதில் அனுபவமுள்ள ஆண் தேவை. வயது 25-40 இடையில் விரும்பத்தக்கது.*
*தொடர்பு:*
விள.இல.1552, மே/பா. உதயன். (5392)

### மாதச் சம்பளம் ரூபா 5,80,000/=!

*விவரங்களுக்கு 16/6, 23/6/2002 "உதயன" நாளிதழைப் பார்க்கவும். அல்லது நேரில் வரவும்.*
திருஞானாஸ்
141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (5367)






முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337263-5
பெக்ஸ்: 446554
WATERTEC
(C/22726)



## யாழ் நகர வாசிகளே !

இதோ இப்போது உங்கள் தேவையறிந்து
உங்கள் கரங்களுக்கும்
உயர்தரமான மெழுகு தடவப்பட்ட
பாதுகாப்பான






## அலடின் தீப்பெட்டி

ஏக விநியோகத்தர்:
றூபா வெர்சடைல் டிரேடர்ஸ்
104ஏ, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (C/22682)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
25
02
1941

உதிர்வு
12
07
2001

## அமரர் சின்னையா நடராசா

பிரிந்தும் பிரியாத, மறைந்தும் மறையாத
தாங்களின் நினைவுடன் என்றும் வாழ்கிறோம்.

பெருந்தெரு,
புலோலி தெற்கு,
புலோலி. (5368)

துயரோடு வாழ்ந்திடும்:
மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.


ACX

## உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால், பொதி விநியோக சேவை

உங்கள் தபால்கள், பொதிகள் இலங்கையின் எப்பாகத்துக்கும் உலகின் எப்பாகத்துக்கும் மிகக் குறுகிய காலத்தில் அனுப்பவேண்டுமெனில் எங்களுடன் தொடர்புகொள்ளுங்கள்!

◇ *எங்கள் சேவைகளானது*

A உள்நாடு
1. யாழ்ப்பாணம் - யாழ்ப்பாணம் - *ஒரு குறிப்பிட்ட மணி நேரத்திலும்*
2. யாழ்ப்பாணம் - கொழும்பு - *24 மணி நேரத்திலும்*
3. யாழ்ப்பாணம் - கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் - *36 மணி நேரத்திலும்*

B. வெளிநாடு
1. இந்தியா, மலேசியா, தாய்வான், சிங்கப்பூர், மாலைதீவு - இரு தினங்களிலும்
2. பிரான்ஸ், டுபாய், சவூதி அரேபியா, ஜேர்மனி, இத்தாலி, கனடா, நியூஸிலாந்து, நோர்வே, கட்டார், சுவிற்சர்லாந்து, லண்டன், ஆஸ்திரேலியா, சுவீடன், பெல்ஜியம், அமெரிக்கா, டென்மார்க். } 3,4 தினங்களிலும்

*உங்கள் பொருள்கள் விநியோகிக்கப்படும்.*
*என்றும் உங்களை அன்புடன் அழைக்கின்றது!*

ACX

இல. 8, நவீன சந்தை, யாழ்ப்பாணம், மேல்மாடி (மக்கள் வங்கி காங்கேசன்துறை கிளை அருகில்)
T.P.021 - 2405 - FAX 021 - 2171
(5404)

உதயன்

# கிழக்கு நிலைமை

சில தினங்களாகக் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களை உலுக்கிவந்த கொந்தளிப்பு நல்லவேளையாக இப்போது அடங்கிவிட்டது.

உயிர் இழப்பு, உடல் ஊனம், பொருள் அழிவு ஆகியவற்றை ஏற்படுத்திய வன்செயல்கள் ஓய்ந்துவிட்டன.

மூதூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி, கல்முனை போன்ற பகுதிகளில் பதற்றநிலையும் தணிந்து வருகிறது. இயல்புநிலை தலைதூக்குகிறது.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீமும் மற்றும் முஸ்லிம் எம்.பிக்களும் -

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவரும் எம்.பியுமான ஜோசப் பரராஜசிங்கமும் மற்றும் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட தமிழ் எம்.பிக்களும் -

தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணத் தலைவர்களும் -

தமிழ், முஸ்லிம் மதப் பெரியார்களும் பிரமுகர்களும் உயர் அதிகாரிகளும் கலவரம் நிகழ்ந்த இடங்களுக்கு நேரில்சென்று மேற்கொண்ட சமாதான முயற்சிகள் கைமேல் பலன் அளித்துள்ளன.

சமாதான முயற்சிகளை எப்படியும் குழப்பி ஆகவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கும் தீய சக்திகளும் -

தமிழ், முஸ்லிம் சமூகங்களின் கூட்டு நல்வாழ்வுக்காகத் தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் காங்கிரஸும் கலந்துபேசி ஒருங்கிணைந்த செயற்பாடுகளில் ஈடுபடுவது என்று பிரபாகரனும் ரவூப் ஹக்கீமும் கடந்த ஏப்ரலில் உடன்படிக்கை செய்து கொண்டதால் சிறுபான்மைச் சமூகங்கள் இரண்டும் ஒன்றுபட்டு திரண்ட சக்தியாக மாறுவதைச் சகிக்கமுடியாத குள்ளநரிகளும் -

அவர்களுக்குத் துணையாக நின்ற பொலீஸாரில் ஒரு பகுதியினருமே கிழக்கில் நடந்த அனர்த்தங்களுக்குப் பொறுப்பு என்று இரு சமூகங்களையும் சார்ந்த தலைவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

பூரண விசாரணை நடத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடித்துச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கையும் விடுத்திருக்கிறார்கள்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த சனிக்கிழமை கொழும்பு ரேணுகா ஹோட்டலில் கிழக்கு நிலைமை பற்றி ஊடகவியலாளர்களுக்கு விளக்குகையில், புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

பிரபாகரன் மீது எமக்கு நம்பிக்கை உண்டு. முஸ்லிம்களின் பாதுகாப்பை அவர் உறுதிப்படுத்த வேண்டும். கிழக்கில் புலிகளின் தலைமைகள் எம்முடன் தொடர்புகொண்டு பேசிப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரவேண்டும் என்றார் ரவூப் ஹக்கீம்.

கல்முனையில் அசம்பாவிதங்கள் நடந்தன என்று கூறமுடியாத அளவுக்கு நேற்று அங்கே அமைதி ஏற்பட்டு நிலைமை வழமைக்குத் திரும்பிவிட்டது.

இதில் புலிகள் வகித்த பங்கு அதிகம் என்ற க்கருத்து நிலவுகிறது.

கல்முனையில் நடைபெற்ற பிராந்திய சமாதானக் கூட்டத்தில் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா பேசுகையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்.

"எமது நடவடிக்கைகள் தனியே தமிழ் மக்களுக்கானவை என்று நினைக்காதீர்கள். எமது அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளும் தமிழ் - முஸ்லிம் மக்களுக்காகவே என்று உறுதியிட்டுக் கூறுகின்றேன். எங்களுடைய அந்த நிலைப்பாட்டின் வெளிப்பாடே பிரபா - ஹக்கீம் உடன்படிக்கை அது எந்தவிதத்திலும் பாதிக்கப்பட விடமாட்டோம்.

முஸ்லிம் சகோதரர்களே, உங்கள் பிரச்சினைகளை நீங்கள் எம்மிடம் சொல்ல விரும்பினால் நீங்கள் எங்கள் அலுவலகத்துக்கு வரவேண்டும் என்றில்லை. நானே உங்களிடம் வருவேன். பள்ளிவாசலுக்குள் மக்களைக் கூட்டி வைத்து அழையுங்கள் வருவேன்."

இப்படிப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா கூறியிருப்பது தமிழ், முஸ்லிம் சமூக நல்லுறவுக்கான ஒளிக்கீற்றாகவும் அதேவேளை அந்த நல்லுறவைச் சிதைக்க விரும்பும் நாசகார சக்திகளுக்கு எச்சரிக்கையாகவும் அமைகிறது.

---

சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில்

## குடும்பப் பிணக்குகள் குறித்த முறைப்பாடுகள் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை1

கடந்த 6 மாதகாலத்தில் மட்டும் சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் விவாகரத்து மற்றும் குடும்பப் பிணக்குகள் தொடர்பாக நூறுக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக பொலீஸ் நிலையப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தத் தொகையானது கடந்த வருடங்களை விட மிகவும் அதிகமானதாகும் என்றும் கூறப்படுகிறது. அதிகரித்து வரும் குடும்பப் பிணக்குகள் விவாகரத்திலேயே முடிவதாக பொலீஸ் அதிகாரி ஒருவர் வருத்தம் தெரிவித்தார்.

இதனைவிட கணவரினால் ஏமாற்றப்பட்ட பெண்கள் பலர் தினம் கண்ணீருடனும் கையில் குழந்தையுடனும் பொலீஸ் நிலையத்துக்கு வந்து முறையிட்டு வருவதாகவும் -

காதலித்து திருமணம் செய்பவர்கள் முறைப்படி திருமணப் பதிவுகளை மேற்கொள்ளத் தவறுவதால் அவற்றுக்கு சட்டப்படி தாம் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் -

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு பொலீஸ் நிலையத்தில் அனுமதிபெற வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

அனுமதி பெறாமல் ஒலிபெருக்கியை பாவித்தால் கடுமையான தண்டப் பணம் அறவிடப்படுவதுடன் ஒலிபெருக்கி சாதனங்களும் பறிமுதல் செய்யப்படும் எனவும் பொலீஸார் அறிவித்துள்ளனர். (ம-4)




## யாழ். - கொழும்பு பஸ் சேவையில் இப்படி ஒரு திருவிளையாடல்!

யாழ்ப்பாணம்,ஜூலை1

யாழ். - கொழும்பு நேரடி சேவையில் ஈடுபடும் சில தனியார் மினிவான்கள் பயணிகளை இடைநடுவில் இறக்கிவிட்டு தலைமறைவாகிவிடுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

ஏ-9 வீதி திறக்கப்பட்டதையடுத்து கொழும்பிலிருந்து இங்கு வந்துள்ள பெருமளவு ஹையஸ் வான்கள் யாழ். - கொழும்பு நேரடி பஸ் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறு சேவையில் ஈடுபட்டுவரும் சில ஹயஸ் வான்களின் சாரதிகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கொண்டு சென்று விடுவதாகக் கூறி மக்களைத் தமது வாகனங்களில் ஏற்றிச் செல்கின்றனர். இதற்குரிய பணத்தையும் அவர்களிடமிருந்து முன்னரே அறவிட்டுவிடுகின்றனர்.

பின்னர் ஓமந்தை மற்றும் வவுனியா போன்ற இடங்களில் பயணிகளை இறக்கி கஸ்ப்பாறுமாறு கூறிவிட்டு வானுடன் தலைமறைவாகிவிடுகின்றனர் - என்று இவ்வாறு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னர் பயணிகள் வவுனியாவிலிருந்து கொழும்புக்கு மேலதிக கட்டணத்தைச் செலுத்தி ரயிலிலோ அல்லது அங்கிருந்து மற்றொரு வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியோ தமது பயணத்தைத் தொடரவேண்டிய நிலை ஏற்படுகின்றது. (ம-4)

## வடக்கு - கிழக்கு பாடசாலைகளில் முகாமிட்டுள்ள படையினரை உடனடியாக வெளியேற்ற வேண்டும்

### ஈழத்துப் பழைய மாணவர்கள் ஆஸ்திரேலியாவில் தீர்மானம்

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தைச் சேர்ந்த ஈழத்துப் பழைய மாணவர் சங்கங்கள் தமது தாயகத்துக்குப் பலம் சேர்க்கும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன.

அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளிலிருந்து இராணுவம் இன்னமும் வெளியேறவில்லை. இதனால் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வி பறிக்கப்படுகிறது. மாணவர்களும், பெற்றோர்களும் உளவியல் தாக்கங்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

தமிழர் தம் வாழ்வில் மிகப் பெரிய சொத்தாக மதிக்கின்ற கல்வியை இராணுவத்தின் இந்த அத்துமீறல் பாழடிக்கிறது.

அடிப்படை - மனித உரிமைகளை மீறுகின்ற இந்தச் செயலுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதற்கு இராணுவம் தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து வெளியேறவேண்டும்.

இந்த விடயத்தில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு சகல ஜனநாயகக் காப்பாளர்களும் முன்வரவேண்டும்.

- இவ்வாறு அத்தீர்மானத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானத்தின் பிரதிகள் ஆஸ்திரேலியப் பிரதமர் மற்றும் ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளுக்கும், மனித உரிமைகள் அமைப்புகளுக்கும், இலங்கை அரசுக்கும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த 20ஆம் திகதி மெல்போர்னில் இடம்பெற்ற ஈழத்துப் பழைய மாணவர் சங்கங்களின் மாநாட்டிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்.பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர்களும் சங்கச் செயற்குழு உறுப்பினர்களும் இம்மாநாட்டில் கலந்துகொண்டு இத்தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர். (ம)

## தமிழீழக் கொள்கையில் ம.தி.மு.க.மட்டுமே உறுதி

தமிழீழம் அமைவது குறித்து அ.தி.மு.க ஒன்றும் சொல்லாது. அமைந்தால் மகிழ்ச்சி என்ற நிலையில் தி.மு.க இருக்கிறது.. ஆனால் அமைய வேண்டும் என்பதில் ம.தி.மு.க. உறுதியாக உள்ளது.

- இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற 'செஞ்சிக்கோட்டை முதல் செங்கோட்டை வரை செஞ்சியார் முழக்கம்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சேது சமுத்திரத்திட்டத்தைச் செயற்படுத்துமாறு கடந்த மூன்று ஆண்டுகளாக வற்புறுத்துகிறோம். அதற்குரிய பூர்வாங்கப் பணிகள் ஆரம்பமாகியிருக்கின்றன. அ.தி.மு.க., தி.மு.க ஆட்சியிலிருந்தபோது செய்யமுடியாததை ம.தி.மு.க.செய்து காட்டியிருக்கிறது.

தமிழர்கள் வேதனைப்படும் போதெல்லாம் நாம் குரல் கொடுக்கிறோம். எவ்வளவு தோல்வி வந்தாலும் திராவிடக் கொள்கைகளையும் கருத்துக்களையும் மக்கள் மனதில் பதிய வைப்பதில ம.தி.மு.க. உறுதியாக இருக்கிறது என்றார் வை.கோ. (ம)

### நாளை

ஆனி 18
செவ்வாய்க்கிழமை
(02.07.2002)
திதி : ஸப்தமி
முற்பகல் 10.03 வரை.
நட்சத்திரம்: உத்திரட்டாதி
முன்னிரவு 11.13 வரை.
சுபநேரம் : 10.26 - 11.56
ராகுகாலம் : 2.56 - 4.26
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒன்றைத் தொடங்காமல் இருப்பதே அறிவுக்குச் சிறப்பு. அங்ஙனம் தொடங்கின் அதை இறுதிவரையில் செய்து முடிப்பது மிகச்சிறப்பு.

## ஈழத்தமிழர் பிரச்சினை விரைவில் தீரவேண்டும்

### ஜயலத்திடம் கி.வீரமணி தெரிவிப்பு

சென்னை,ஜூலை1

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்பட வேண்டும் என்று திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் கி.வீரமணி விருப்பம் தெரிவித்தார்.



அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவும் துணைவியாரும் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி.வீரமணியை சந்தித்த போது எடுக்கப்பட்ட படம்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அகதிகள் மறுவாழ்வு, புனரமைப்புத்துறை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவைக் கடந்த வெள்ளிக்கிழமை சென்னையில் சந்தித்தபோதே கி.வீரமணி இதனைத் தெரிவித்தார்.

ஈழத்தமிழர் பிரச்சினை குறித்து இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறவிருக்கும் பேச்சு வெற்றியடைய வேண்டும் என்று விரும்புவதாகவும் அப்போது கி.வீரமணி தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்கு நல்ல தீர்வுகாண்பதில் இலங்கை அரசு அக்கறையுடன் இருப்பதாக கி.வீரமணியிடம் இந்தச் சந்திப்பில் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா தெரிவித்தார். (ஒ)

# குழந்தை இலக்கியங்களை ஆக்குவது கத்திமுனையில் நடப்பதற்கு ஒப்பானது

## ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஜூலை1

குழந்தை இலக்கியங்கள் ஆக்குவது கத்திமுனையில் நடப்பதற்கு ஒப்பானது. அத்தகைய ஒரு செயலை பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் செல்வி மலர் சின்னையா செய்து முடித்துள்ளார்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற செல்வி மலர் சின்னையா அவர்களால இயற்றப்பட்ட "மழலை எழுச்சிநாடா" ஒலிப்பேழை வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய கலாநிதி சிவலிங்கராசா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:

குழந்தைப் பாடல்களை நாம் சிறு வயதிலிருந்து கற்று வந்துள்ளோம். அவை நாட்டார் பாடல்களாகவும், குழந்தைப் பாடல்களாகவும் காணப்பட்டன.

குழந்தை இலக்கியங்கள் இந்தியாவிலேயே கொடிகட்டிப் பறந்தன. 1894ஆம் ஆண்டளவிலேயே அவை ஈழத்தில் பரவத் தொடங்கின. இதனை ஈழத்தில் வளர்த்த பெருமை அருள் நந்தி, பண்டிதர் கணபதிப்பிள்ளை, சோமசுந்தரப்புலவர் போன்றோரையை சாரும்.

ஈழத்திலே குழந்தை இலக்கியங்கள் காணப்பட்டபோதும் அதனை வளர்த்த பெருமை யாழ்மண்ணையே சாரும் என்றும் முன்னைய காலங்களில் குழந்தைப் பாடல்கள் நூல் வடிவங்களிலேயே காணப்பட்டன. ஆனால் இன்று இது ஒலிப்பேழையாக வெளிவருவது சிறுவர்கள் இதனை செவிவழியாகக்கேட்டு செயற்படுவதற்கு வழிசமைக்கும். இத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டிற்கான ஆசியுரையை நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியாரும் வாழ்த்துரையை யாழ் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் வி.என்.எம்.நவரத்தினம், கலாபூஷணம் எஸ்.திலகநாயகம் போல் ஆகியோரும் வெளியீட்டுரையை யாழ். வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி க.சுப்பிரமணியம் நிகழ்த்தினர்.

ஒலிப்பேழையை, நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் வைத்திலிங்கம் வெளியிட்டு வைக்க, முதல்பிரதியை முன்னாள் ஆசிரியரும், கட்டைவேலி ப.நோ.கூ.சங்கத் தலைவருமான தசிதம்பரப்பிள்ளை பெற்றுக்கொண்டார்.(ம-ரி)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 29 - 06 - 1933



ஆண்டவன் அடியில் 01 - 06 - 2002

### திருமதி மகேஸ்வரி நடராசா

01. 06. 2002 இல் நீர்கொழும்பில் சிவபதமடைந்த தாவடியைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது அன்புத் தாயார் திருமதி மகேஸ்வரி நடராசா அவர்களின் 31ஆவது நாளில் அவரை நினைவு கூருகின்றோம். ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அம்மா!
என்றும் எங்களின் குலவிளக்கே! அணையாத தீபமே!
அன்புடன் எம்மை அரவணைத்து, ஆதரித்துப்
பண்புடன் எம்மை வாழ வைத்த பார் போற்றிடும்
எங்களது அன்புத் தெய்வமே! பாச ஒளியே!

இன்றுடன் 31 நாள்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகளும் நிழலும் எங்கள் நெஞ்சங்களை விட்டு எத்தனை ஆண்டுகள் சென்றாலும் எம்மை விட்டுப் பிரியவே பிரியாது! மறையவே மறையாது!!

ஓம் சாந்தி!

பெரியமுல்லை,
நீர்கொழும்பு,
T.P: 074-872994

பிரிவால் துயருறும்:
மகள்மார், மருமகன்மார், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

(5409)



அனைவரும் விரும்பும் வகையில்
இன்ரநெற் இணைப்பின் ஊடாக
**சர்வதேச தொலைத்தொடர்பு**

யாப்போன் **Yap phone**

Putting Your Voice over the Internet

உயர்ந்த தரம். குறைந்த செலவில் நிறைந்த சேவை.

மேலதிக தொடர்புகளுக்கு:

அல்டி எலக்ரோனிக்ஸ்
15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.No.: 2676
(C/22748)
Email: aldi -electronics@hotmail.com.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 - 04 - 1963



இறப்பு 24 - 06 - 2000

### அமரர் சின்னக்குட்டி திறீராசா (ரவி)

திதி: 01.07.2002

பாசத்தின் வித்தாய், பண்பின் உறைவிடமாய்,
பார்ப்போர்க்கும் உத்தமனாய் வாழ்ந்த - என் தெய்வமே!
பலகாலம் வாழ்வீரென நாமிருக்க
பாதியிலே எம்மைவிட்டுச் சென்றதேனோ? - ஐயா
பாரினில் நாம் பரிதவிக்க காலனவன் கவர்ந்துவிட்டான்!
இரண்டாண்டுகள் உருண்டோடினாலும்
எம் கண்ணீரே வற்றாது
காலமெல்லாம் உம் நினைவினிலே உயிர் வாழ்கின்றோம் இப்பாரினிலே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அல்வாரை வடக்கு,
கொடிகாமம்.
தகவல்:
சின்னக்குட்டி குடும்பத்தினர்.

உம் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, தங்கை, தம்பி,
மைத்துனர், மருமகன், மாமாமார்,
மாமிமார், உற்றார், உறவினர்.

(5402)



# யாழ் மக்களின் அபிமானத்தை வென்ற TATA இப்பொழுது உங்கள் மண்ணில்......



LPO 1313 EURO BUS



LPT 613 CAB with HALF LOAD BODY



LPT 1615 CAB with CUMMINS ENGINE

எப்பொழுதும் உங்களுக்கான
அனைத்து சேவைகளையும்
வழங்குவதற்கு
டிமோ நிறுவனத்தினர்
யாழ். மண்ணில்
தயாராக உள்ளனர்.



SE 1613 CHASSIS



LPT 1613 CHASSIS

- யாராலும் வழங்கமுடியாத கவர்ச்சிகர விலைக்கழிவு.
- 1 1/2 வருடத்துக்கான அல்லது 1,50,000 கிலோ மீற்றருக்கு உத்தரவாதம்.

யாழ். மக்களின் நலன்கருதி விசேட விலைக்கழிவுகள் ஜூலை மாதம் முதலாம் திகதி வரை அமுலில் இருக்கும். இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடாதீர்கள்!

- யாழ். மண்ணிலேயே சகல உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
- முதன்முதலாக யாழ். மண்ணில் டிமோ நிறுவனத்தின் அங்கீகாரம்பெற்ற தொழிற்சாலை.
- நன்கு பயிற்றுவிக்கப்பட்ட இயந்திர தொழில்நுட்பவியலாளர்கள்.

யாழ்ப்பாணத்தில்:

*Promotors Engineering Company Pvt. Ltd.*
*No:844, Point Pedro Road,*
*Nallur, Jaffna. Tel: 021-3088*

(சி22687)

கொழும்பில்:

*Disel & Motor Engineering Co.Ltd.*
No:65, Jetawana Road, Colombo -14.
Tel: 449797, 077-742616, 338883, 332809 Fax:449080
E-mail:dimo@dimolanka.com

# வியாழ மாற்றம்

# உங்களுக்கு எப்படி?

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)

சூழ்நிலைக்குத் தக்கவாறு நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு, சுவாரசியமான பேச்சாற்றலால் அனைவரையும் கவர்ந்து, வாழ்வில் முன்னேறும் கடகராசி நேயர்களே!

*பொது:* உங்கள் ராசிக்கு 6க்கும் 9க்கும் அதிபதியான குரு உங்கள் ராசிக்கே வருகின்றார். இது அவருக்கு ஜென்மஸ்தானம். இங்கே உச்சமாகி உங்கள் ராசிக்கு 5ஆம் இடமான விருச்சிகத்தையும், 9ஆம் இடமான மீனத்தையும் பார்க்கின்றார். இதனால் உங்களுக்குப் பல விதங்களிலும் அனுகூலம் ஏற்படும். வாழ்க்கைத் தரம் உயரும். வெளிநாடுகளில் உள்ளோரின் ஆதரவால் உங்கள் பொருளாதார வசதி மேம்படும்.

எனினும் உங்களுக்கு ஏழரை நாட்டு சனி ஆரம்பிக்கப் போவதை மறப்பதற்கில்லை. ஆயின் இதற்காக நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. குருபகவான் சிம்மத்துக்குப் போகும்போது பல அரிய நன்மைகளை வழங்கப்போகிறார். எனவே அடுத்த இரண்டு வருடகாலம் உங்கள் காட்டில் மழை தான்.

*உத்தியோகஸ்தர்கள்:* வெளிநாட்டு வேலைக்காக விண்ணப்பித்திருந்தவர்கள் இந்த வருடம் ஆகாய விமானம் ஏறி, அயல்நாடு செல்வது உறுதி. உள்நாட்டில் பணிபுரிவோர்கள் ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்றவற்றைப் பெற்று மகிழ்வார்கள்.

*வியாபாரிகள்:* செய்துகொண்டிருக்கின்ற தொழிலை மாற்றி வேறு லாபகரமான முயற்சிகளில் ஈடுபடத் திட்டமிட்டுக் கொண்டிருந்தவர்கள் இப்போது துணிந்து அதற்கான பூர்வாங்க வேலைகளில் இறங்கலாம். நன்மை உண்டாகும்.

*விவசாயிகள்:* விளைச்சல் திருப்திகரமாக இருக்கும். மனதில் ஏற்பட்டிருந்த தளர்ச்சி நீங்கும். நீராதாரங்கள் ஏமாற்றாமல் கை கொடுக்கும்.

*அரசியல்வாதிகள்:* பலருக்கு திடீரென்று எதிர்பாராத பதவி உயர்வு ஏற்படும். எனினும் மனதில் சிற்சில குழப்பங்கள் நீடித்துக்கொண்டுதான் இருக்கும். ஆயின் இவை உங்கள் பொது வாழ்வைப் பாதித்து விடாது.

*கலைத்துறையினர்:* பிடிவாத குணமிருப்பவர்கள் அத்தகைய போக்கை மாற்றிக்கொண்டு, நலம் விரும்பிகளின் அறிவுரைகளை ஏற்று நடப்பது நல்லது. அப்படிச் செய்தால் பல வகையிலும் முன்னேற்றத்தைக் காணலாம்.

*பெண்கள்:* தேவையற்ற கோபதாபங்களுக்கு ஆளாகாமல் கணவரின் மனப்போக்கை அனுசரித்து நடந்து கொண்டால் எவ்விதச் சிக்கலும் இல்லாமல் இந்த வருடத்தை ஓட்டி விடலாம். பணப்புழக்கத்தில் தட்டுப்பாடு இருக்காது என்பதால் குடும்ப சௌகரியங்கள் கூடும்.

*மாணவமணிகள்:* வெளிநாடு சென்று படிக்க ஆசைப்படுபவர்களின் விருப்பம் நிச்சயமாக நிறைவேறும். ஒருசிலர், வேறு மாநிலங்களுக்குச் சென்று உயர்கல்வி பெறுவார்கள்.

*அறிவுரை:* குடும்பத்தில் கருத்து வேற்றுமை உண்டாவதற்குச் சாத்தியக்கூறுகள் இருப்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பொறுத்தார் பூமி ஆள்வார்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)

அளவற்ற துணிவும், ஆற்றலும், இளகிய மனமும் கொண்ட சிம்மராசி வாசகர்களே!

*பொது:* உங்கள் ராசிக்கு 5க்கும் 8க்கும் அதிபதியான குரு பகவான், 12ஆவது இடத்துக்கு வருகிறார். இதனால் கடந்த இரண்டு வருட காலமாக உங்களை அழுத்திக் கொண்டிருந்த பல தொந்தரவுகள் நீங்கிவிடும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த சச்சரவுகள் தீர்ந்து, நிம்மதி உண்டாகும். பண வரவு திருப்திகரமாக இருக்கும். தொலைந்து போன பொருள்கள்கூட திரும்பக் கிடைக்கும் காலகட்டம் இது.

எனினும் மனச்சாட்சிக்கு விரோதமான எந்தவிதத் தவறையும் செய்யாமல் தவிர்த்து விடுங்கள். உங்கள் ராசிக்கு சனி பகவான் சத்துருவாக இருந்தாலும் அவர் லாப ஸ்தானத்தில் இருப்பதால் ராஜயோகத்தை வழங்குவார். எனவே நேர்மையோடு நடந்து, வெற்றிக் கொடியை நாட்டுங்கள்.

*உத்தியோகஸ்தர்கள்:* நல்ல வேலையை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அருமையான வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏற்கனவே திருப்திகரமான பணிகளில் இருப்பவர்கள் உயர் பதவிகளைப் பெறுவார்கள்.

*வியாபாரிகள்:* உங்களைக் கசக்கிப் பிழிந்து கொண்டிருந்த தொழில்களைக் கைகழுவி, நிம்மதியான வியாபாரத்துக்கு மாறுவீர்கள். இந்த வருடம் ஆரம்பிக்கின்ற தொழில், ஸ்திரமான லாபத்தை வழங்கும்.

*விவசாயிகள்:* நிம்மதி பெருகும். தேவையானபோது நிதி உதவிகள் கிடைக்கும். தேவையற்ற தொந்தரவுகள் தாமாகவே விலகிவிடும்.

*அரசியல்வாதிகள்:* உங்கள் பெருமை, முன் எப்போதையும் விட பல மடங்கு உயரும். பலர் உங்களுடைய வசீகரத்தில் மயங்கி அடிமை போல் ?விடுவர்.

*கலைத்துறையினர்:* கவர்ச்சி அதிகரிக்கும். வருமானமும் உயரும். ஆயின் உங்களுக்கு வரவேண்டிய சம்பளப் பணத்தை சற்றுப் போராடித்தான் பெறும்படியாக இருக்கும்.

*பெண்கள்:* ஜூலை 31 வரை நீங்கள் எதிலும் நிதானமான போக்கைக் கடைப்பிடிப்பது நல்லது. இந்தத் தேதிக்குப் பின் குடும்ப ஒற்றுமை ஓங்கும். சந்தோஷங்கள் தழைக்கும்.

*மாணவமணிகள்:* முன்னேற்றம் தடைப்படாது. எனினும் கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்ளவும். விஞ்ஞானம் பயிற்றும் சட்டத்துறையில் பயில்பவர்கள் மேன்மை பெறுவார்கள்.

*அறிவுரை:* வரப்போகின்ற இரண்டு வருட காலமும் உங்களுக்குப் பொற்காலம் என்றே கூறலாம். எனவே வாய்ப்புகளைத் தவறவிடாமல் பயன்படுத்தி, வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்.

## கன்னி

(உத்திரம் 2ஆம் பாதம்முதல் அஸ்தம், சித்திரை 2ஆம் பாதம் முடிய)

ஆன்மிகத்தில் அசைக்க முடியாத ஈடுபாடும், பகைவர்களை மன்னிக்கும் பெருந்தன்மையும், புண்ணிய காரியங்களில் ஆர்வமும் கொண்ட கன்னி ராசி வாசகர்களே!

*பொது:* உங்கள் ராசிக்கு 4க்கும் 7க்கும் அதிபதியான குருபகவான், லாப ஸ்தானமாகிய கடகத்தில் பிரவேசிக்கிறார். இதனால் உங்கள் பெருமை உயரும். குடும்பத்தில் சௌக்கியமும், சந்தோஷமும் உண்டாகும். உங்கள் குழந்தைகளின் வாழ்வு ஏற்றம் பெறும். கணவன், மனைவியரிடையே ஒற்றுமை தழைத்தோங்கும். பலருக்குப் புது வீடு வாங்குகிற யோகம் ஏற்படும்.

உங்கள் ராசிக்கு 10ஆம் இடத்துக்கு யோககாரனாகிய சனி பகவான் வரப்போகின்றார். புதன் வீட்டில் அமரும் சனி, மிக உயர்ந்த யோகங்களைக் கொடுப்பார். எனவே கவலைப்படாமல் கம்பீரமாக இருங்கள்.

*உத்தியோகஸ்தர்கள்:* வருமானம் பலமடங்கு அதிகரிக்கும். பலருக்கு பிரமோஷன் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவு அமோகமாக இருக்கும்.

*வியாபாரிகள்:* நிலுவையில் இருந்த கடன்கள் வசூலாகும். தொழிலை விரிவுபடுத்தச் சந்தர்ப்பங்கள் அமையும்.

*விவசாயிகள்:* பழைய கடன்களை இப்போது எளிதாக அடைத்துவிடுவீர்கள். தானிய உற்பத்தி மிகவும் திருப்திகரமாக இருக்கும்.

*அரசியல்வாதிகள்:* கடந்த இரண்டு வருடங்களாக இருந்த மந்த நிலைமை விலகி, பற்பல முன்னேற்றங்களைக் காண்பீர்கள்.

*கலைத்துறையினர்:* இத்தனை நாள்களாக எத்தனையோ நேரடி, மறைமுக இடையூறுகளைச் சந்தித்துக் கொண்டிருந்தீர்கள். அத்தகைய தொல்லைகள் இனி தகர்க்கப்பட்டு, ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவீர்கள்.

*பெண்கள்:* தாம்பத்திய சுகம் கூடும். மனத்தில் நிம்மதி நிலைத்திருக்கும். உங்கள் குழந்தைகளின் முன்னேற்றம் உங்கள் சந்தோஷத்தை வளர்க்கும்.

*மாணவமணிகள்:* கல்வித் திறமை அதிகரிக்கும். உங்கள் நினைவாற்றல் பெருகும். நடனம், ஓவியம் போன்ற கலைகளைப் பயில்வோர்கள் ஏற்றம் பெறுவார்கள்.

*அறிவுரை:* இந்த வருடம் உற்றார் உறவினரின் பார்வை உங்கள் மேல் பதியும். பொருளாதார ரீதியில் உங்கள் சொந்தங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தால், உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். இது ஒரு பெரும் புண்ணியம்.

(தொடரும்)

---

# மீனவர் மீதான கெடுபிடிகள் உடன் நிறுத்தப்படவேண்டும்

## கடற்புலிகள் தளபதி சூசை தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூலை1

நாட்டில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுவரும் இன்றைய சூழ்நிலையில் கடற்தொழிலையே நம்பி வாழ்க்கை நடத்தும் எமது மீனவர்களின் வலைகளை வெட்டியும், அவர்களின் தொழிலுக்கு கட்டுப்பாடுகளை விதித்தும் கடற்படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

- இவ்வாறு கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட்டிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று இரவு 9 மணியளவில் கிளிநொச்சியில் உள்ள அரசியல் நடுவப் பணியகத்தில் கண்காணிப்புக்குழுத் தலைவரைச் சந்தித்து உரையாடியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுமார் ஒருமணி நேரம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது புலிகளின் கடல் போக்குவரத்து தொடர்பாகவும், புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்டுவரும் அடாவடித்தனங்கள் குறித்தும் சூசை கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் எடுத்துக்கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது அரசியல்துறையைச் சேர்ந்த புலித்தேவனும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி போல் எரிக்குட்கலந்துகொண்டனர். (ஐ-6)

## குடாநாட்டுக்கு 10 வருடங்களின் பின்

# கட்டுமரம் செய்வதற்கான 'அல்வீசியா' மரம் வருகிறது

வடமராட்சி கிழக்கு,ஜூலை1

கட்டுமரங்களைச் செய்வதற்கான 'அல்வீசியா' மரங்கள் தெற்கிலிருந்து தரைவழிப் பாதையால் லொறிகளில் எடுத்துவரப்படுகின்றன.

பத்துவருடங்களுக்கு முன்னர் தரைவழிப் பாதை தடைப்பட்டதைத் தொடர்ந்து இம்மரங்கள் வடக்கிற்கு எடுத்துவரப்படவில்லை. இதனால் கடற்றொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர். உள்ளூரிலுள்ள சில மரங்களையே கட்டுமரம் செய்வதற்கு அவர்கள் பயன்படுத்திவந்தார்கள்.

தரைவழிப்பாதை திறக்கப்பட்டதையடுத்து தெற்கிலிருந்து இம்மரங்கள் தற்போது எடுத்துவரப்படுகின்றன. (ம-182-173)

# கோடா வைத்திருந்தவருக்கு ரூ.35 ஆயிரம் தண்டம்

வலி.வடக்கு,ஜூலை1

சட்டவிரோதமான முறையில் 150 லீற்றர் கோடா வைத்திருந்த நபருக்கு 35ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டி மல்லாகம் மதுவரித் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிபதி பாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட நபருக்கே இந்தத் தண்டம் விதிக்கப்பட்டது.

குப்பிளான் தெற்கு, வீரமனைப் பகுதியைச் சேர்ந்த தியாகராசா புவனேஸ்வரி என்ற அந்த நபர் தனது குற்றத்தை நீதிமன்றில் ஒப்புக்கொண்டார். (ம-815)

## வடமராட்சி கிழக்கில் திரிபோஷா சத்துணவு விநியோகம்

பத்துவருட இடைவெளிக்குப் பின்னர் வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த கர்ப்பிணிகள் மற்றும் குழந்தைகளுக்கு திரிபோஷா சத்துணவு வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் பருத்தித்துறை, சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ந. ஞானசுதன் தலைமையில் மேற்படி பகுதிகளுக்குச் சென்ற சுகாதாரப் பகுதியினர் போஷாக்குக் குறைந்த குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், ஆகியோருக்கு திரிபோஷா சத்துணவு வழங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# மோ.சைக்கிளில் வந்தோரை மோதிவிட்டுத் தப்பிய லொறி!

## ஆனையிறவு வெளியில் சம்பவம்

கிளிநொச்சி,ஜூலை1

ஆனையிறவு வெட்டவெளிப் பகுதியில் கடந்த வெள்ளியன்று மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பொதுமக்களை வேகமாக வந்த லொறி ஒன்று மோதித் தள்ளிவிட்டு நிற்காமல் சென்று மறைந்துள்ளது.

பொதுமக்கள் நடமாட்டம் குறைந்திருந்த நேரத்தில் வவுனியாவில் இருந்து யாழ்.நோக்கி பொருள்களை ஏற்றிவந்த லொறியே எண்ணிப்பில் இருந்து யாழ்நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்த பொதுமக்களை மோதித் தள்ளிவிட்டு முகமாலையூடாக யாழ்ப்பாணம் வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த விபத்தில் சிக்கி ஸ்கந்தபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்த கே. ராஜரட்ணம் (வயது-38); என்.யோணேஸ்வரன் (வயது-30) மற்றும் ஜெயந்தி நகர், கிளிநொச்சியைச் சேர்ந்த வி. லோகநாதன் (வயது-25) ஆகிய மூவரும் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் ராஜரட்ணம் படுகாயமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது. இந்த விபத்துக்கு காரணமான லொறி தொடர்பான விவரங்களை அறிவதில் கிளிநொச்சி காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இரு தினங்களில் இந்தப் பகுதியில் இடம்பெற்ற இரு வீதி விபத்துக்களில் சிக்கி 6 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-6)

# தென்மராட்சி கல்வி வலய தமிழ்த்தினப் போட்டிகள்

தென்மராட்சி,ஜூலை1

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான வலய மட்ட தமிழ்மொழித் திறன் போட்டிகள் எதிர்வரும் 6ஆம், 7ஆம், 13ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 6ஆம் திகதி எழுத்தாக்கம், குறுநாடகப் பிரதியாக்கம், கவிதையாக்கம், சிறுகதையாக்கம், வாசிப்பு; ஆக்கத்திறன், வெளிப்பாடு (கதைகூறல்), இசையும் அசையும், பேச்சு, பா ஓதல் ஆகிய போட்டிகளும் ஏழாம் திகதி திறந்த போட்டிகளான நாடகம், விவாதம், வினாவிடை, வில்லுப்பாட்டு, கூத்து ஆகியனவும் 13ஆம் திகதி தனிநடனம், குழு நடனம், இசை(தனி), இசை(குழு) ஆகியனவும் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (எ-117)

## போட்டிப் பரீட்சை

வடக்கு - கிழக்கு, பொதுச்சேவை சிற்றூழியர்களை மாகாண பொது எழுதுநர் சேவையின் வகுப்பு II 'ஆ' பிரிவுக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் ஜூலை மாதம் 13ஆம், 14ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (எ-100)

# புனரமைப்புப் பணிகளில் புலிகள்

பட்டிருப்பு,ஜுலை1

பட்டிருப்புக் கல்வி வலயத்தில் உள்ள பல பாடசாலைகளில் புதிதாக மைதானம் அமைத்தல், ஏற்கனவே உள்ள மைதானங்களைப் புனரமைத்தல் போன்ற பணிகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைய கடந்த அறுபது வருடகாலமாக மைதானம் இன்றி இயங்கிவரும் துறைநீலாவணை மகா வித்தியாலயத்துக்கான மைதானம் அமைக்கும் பணியை சிரமதானம் மூலமாக கடந்த புதன்கிழமை முதல் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வூரில் உள்ள ஒவ்வொரு குடும்பத்திலும் இருந்து ஒருவர் வீதம் வரவழைக்கப்பட்டு, இந்தச் சிரமதானம் மேற்கொள்ளப்படுவதுடன் இப்பிரதேசத்தில் உள்ள உழவு இயந்திர உரிமையாளர்களும் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் துரையின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சிரமதானம் மூலமாக மைதானம் அமைக்கும் பணி பெரிய கல்லாறு, பெரிய நீலாவணை போன்ற இடங்களில் ஏற்கனவே இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1944 - 09 - 26

விண்ணில் 2002 - 06 - 01

### கணபதிப்பிள்ளை பஞ்சலிங்கம்

திதி: 2002-07.01

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லவ் லேன், உடுவில். - குடும்பத்தினர். (5436)


## NEW SCIENCE HALL

Jaffna

**PHYSICS**

By: KARUNANITHY

அலகுரீதியான மீட்டலும் வினாவிடையும்

Tue., Thu. 6.00 - 7.00

ஆரம்பம் : 02.07.2002

**2004 A/L**

ஒலியியல்

Wed. - 4.00 - 5.00

Fri. - 4.30 - 5.30

ஆரம்பம் : 03.07.2002 (5438)



## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஹை ஏஸ் வான் TOYATA டொயட்டா (செல்மொடல்) HIACE.LH.51 உற்பத்தி: 89 வருடம் A/C, P/S (கட் கிளாஸ், முழு ஆசனங்களுடன் கூடியது)

தொடர்பு:- 7/3, புது வீதி, கொய்யாத்தோட்டம்.

T.P: 2414, 2458. (5437)


## வாழ்க! வளர்க!!



அருள்நெறித் தொண்டர்

### திரு.சிவ.ஆறுமுகசாமி J.P.

அவர்கள்

வடபிராந்திய போ.சபை - ஊழியனாக

வடபிராந்திய இந்துப் பேரவை - அமைப்பாளராக

விநாயகர் தருமநிதிய - தலைவராக

01.07.2002 இல் அகவை அறுபது கண்டு ஓய்வுபெற்று, சேவை தொடரும் தொண்டனே நீ வாழ்க!

அன்புச் சோதரன் குடும்பம். (5426)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை சண்முகம்

**(பாணந்துறை பிரபல வர்த்தகர்)**

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், புதுவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சண்முகம் அவர்கள் நேற்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சுந்தரம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மருமகனும் புனிதவதியின் அன்புக் கணவரும், சிவாணி, சிவபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும் து.சுப்பிரமணியம், சி.றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபன், சுபாஷன், திவ்வியா, பிரதீக், சஜன், சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(02.07.2002) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு காரைநகர், புதுறோட்டில் உள்ள அன்னாரது இலலத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுறோட், காரைநகர்.* (5431) *தகவல்:* மனைவி, பிள்ளைகள்.


பரம்பரை பரம்பரையாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆயுர்வேத தயாரிப்பு.





மூவ் பாம்

தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு

முட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து வலிகளுக்குமான முழுமையான நிவாரணி



இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது

விநியோகிப்போர் பார்ம்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559







# இலங்கை வங்கி

தெற்கிலிருந்து யாழ்.நோக்கி

01.07.2002



உங்கள் வாழ்வின் உறுதுணை

இலங்கை வங்கி,

மேற்றரக் கிளை,

யாழ்ப்பாணம்.

பருத்தித்துறை - யாழ். பாதையில்

# அடிக்கடி பழுதடையும் பஸ்களால் பயணிகளுக்குப் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜூலை1

பருத்தித்துறையிலிருந்து யாழ். நோக்கிச் செல்லும் 750 பாதை இலக்க சேவையில் ஈடுபடும் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள் அடிக்கடி இயந்திரக்கோளாறு காரணமாக பழுதடைவதனால் அப்பாதையில் பிரயாணம் செய்யும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தமது நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு ஏராளமானவர்கள் இப்பாதையால் பிரயாணம் செய்கின்றனர். அதற்கேற்ற வகையில் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என்ற குறையும் மக்களிடம் உள்ளது. இந்த நிலையில் தற்போது சேவையில் ஈடுபடும் பஸ்களும் அடிக்கடி பழுதடைவதால் பாடசாலை மாணவர்கள் உட்பட அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களும் பெரும் பாதிப்படைகின்றனர்.

பஸ்கள் பழுதடைந்து இடை நடுவில் வீதிகளில் நிற்பதனால் அதில் பயணிப்போர் வீதியோரங்களில் காத்து நிற்கும் பரிதாபத்தை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

(ம-ரி)

## 4 பாடசாலைகள் பளையில் இன்று ஆரம்பம்

மருதங்கேணிப் பிரதேசத்தில் மேலும் நான்கு பாடசாலைகள் இன்று தொடக்கம் சொந்த இடங்களில் இயங்கவுள்ளன.

மக்கள் மீளக் குடியேறியதையடுத்து, மாமுனை அ.த.க.பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஷ்ட மகா வித்தியாலயம், கேவில் அ.த.க. பாடசாலை ஆகியவற்றினை இயங்கவைப்பதற்கு வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-182)

நஞ்சூட்டி அழிக்கப்பட்ட

# இறந்த நாய்களின் உடல்களால் சுழிபுரம் பகுதியில் துர்நாற்றம்

சுழிபுரம்,ஜூலை1

நஞ்சூட்டி அழிக்கும் நடவடிக்கையையடுத்து சுழிபுரம் சத்தியக்காட்டு சந்தைப் பகுதியில் திரிந்த கட்டாக்காலி நாய்கள் ஆங்காங்கே இறந்து அவற்றின் உடல்கள் அழுகுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் குறை கூறுகின்றனர்.

இப்பகுதியில் சுகாதாரக்கேட்டை விளைவிக்கும் கட்டாக்காலி நாய்களுக்கு நஞ்சு கலந்த உணவுகளை வைப்பதன்மூலம் அவற்றை அழிக்கும் பணியை சுகாதார சேவை அலுவலர்கள் கடந்த புதன்கிழமை மேற்கொண்டனர்.

நஞ்சு கலந்த உணவை உட்கொண்ட நாய்கள் பலவும் குடியிருப்பு காணிகள் உட்பட மக்கள் நடமாடும் பல இடங்களிலும் விழுந்து இறந்தன. ஆனால் அவ்வாறு இறந்து கிடக்கும் நாய்களின் உடல்களை உடனுக்குடன் அகற்றி அழிக்க எந்த வித நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இறந்து கிடந்த நாய்களின் உடல்கள் பிறநாய்களாலும், காகங்கள் போன்றவற்றாலும் கடித்து குதறப்பட்டும், அழுகியும் சகிக்கமுடியாத துர்நாற்றத்தை எழுப்பியுள்ளன.

சுகாதார சீர்கேட்டை காப்பாற்ற நாய்களுக்கு நஞ்சூட்டிக் கொன்று விட்டு இறந்த நாய்களின் உடல்கள் துர்நாற்றம் வீசி சுகாதாரக் கேட்டை விளைவிக்கும் அளவுக்கு விட்டு வைத்துள்ளமை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி-28)

# ஆயுர்வேத வைத்தியசாலை மீண்டும் பளையில்

தென்மராட்சி,ஜூலை1

பளைப் பிரதேச சபையின் ஆயுர்வேத ஆஸ்பத்திரி மற்றும் முன்பள்ளி ஆகியவை மீண்டும் பளையில் இயங்கிவருகின்றன.

ஆயுர்வேத ஆஸ்பத்திரி புலோப்பளை வீதியில் பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகத்திற்கு முன்பாக உள்ள தனியார் கட்டடத்திலும், பளை அந்திராயன் தேவாலயக் கட்டடத்தில் முன்பள்ளியும் இயங்குவதாகப் பிரதேச சபை செயலாளர் இ.து.சிவராசா தெரிவித்தார்.

முன்பள்ளியில் இருபது மாணவர்கள் கல்வி கற்பதாகவும், ஆயுர்வேத ஆஸ்பத்திரியில் தினமும் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். பிரதேச சபையின் தலைமை அலுவலகம் பளையில் இயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-117)

# பனம் கைப்பணிப் பொருள்கள் தரைப்பாதையூடாக கொழும்புக்கு!

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம் கைப்பணிப் பொருள்களை இம்மாதம் முதல் தரைவழிப் பாதையூடாக கொழும்புக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் கப்பல்மூலமாக தென்பகுதிக்கு அனுப்பப்பட்டு வந்த பனம் கைப்பணிப் பொருள்களை இம்மாத நடுப்பகுதியிலிருந்து தரைப் பாதையூடாக அனுப்புவதற்கு யாழ்ப்பாணம் தொழிற்றுறை திணைக்களமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை -

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம் கைப்பணிப் பொருள்களுக்கு தென்பகுதியில் மட்டுமன்றி வெளிநாடுகள் பலவற்றிலும் பலத்த கிராக்கி ஏற்பட்டிருப்பதாகவும் -

அவற்றை முதற்கட்டமாக கனடா, லண்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் குடாநாட்டில் பனம் கைப்பணியாளர்கள் மிகவும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-4)

# இன்றுமுதல் கணனி மயமாகும் இலங்கை வங்கி யாழ்.கிளை

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியிற் பங்குகொள்கின்ற நிறுவனங்களில் வங்கிகள் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன. வங்கிகளின் தொழிற்பாடு மனித இருதயத்தின் செயற்பாட்டுடன் ஒத்துநோக்கப்படுகின்றது. மனிதன் உயிர்வாழ்வதற்கு குருதிச் சுற்றோட்டம் எவ்வாறு உதவி புரிகின்றதோ அதேபோன்று வங்கிகள் வைப்புக்களைத் திரட்டுவதற்கு வாய்ப்பு இருக்கின்ற பகுதிகளில் வைப்புக்களைத் திரட்டித் தேவையான பகுதிகளில் அபிவிருத்திக்குக் கடன் வசதிகளை வழங்கி நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிபுரிகின்றன.

1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கமைய பல்தேசிய வங்கிகள் எமது நாட்டில் தமது கிளைகளை உயர்தொழில்நுட்ப வசதிகளுடன் ஆரம்பித்தன. தேசிய வங்கிகள் வெளிநாட்டு வங்கிகளுடன் போட்டிபோட்டுத் தமது சந்தைப் பங்கை நிலைநாட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அத்துடன் தொழில்முயற்சிகள் விரிவடைந்து செல்ல வங்கிச் சேவைக்கான கேள்வி அதிகரிப்பு ஏற்பட்டது. இவ்வாறான தேவைகளை இலகுவில் நிறைவுசெய்யும் நோக்குடன் எமது நாட்டிலுள்ள வங்கிகள் பலவற்றில் உயர் தொழிநுட்பக்கருவிகள் புகுத்தப்பட்டுப் பல புதிய நிதி சார்மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

இலங்கை வங்கி 1939ஆம் ஆண்டு ஆவணி மாதம் முதலாம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. வங்கித்துறையில் ஏற்பட்டுள்ள தற்கால அபிவிருத்தி முறைகளைப் பின்பற்ற அது தவறவில்லை.

வங்கியின் 16கிளைகள் மின் தொடருளி முறையில் (ON LINE SYSTEM) யுனிசிஸ் UNISYS திட்டப்படியும், IBMAS400 முறைப்படி 17கிளைகளும், NIXDORF முறைப்படி 10 கிளைகளும் MICRO BANK முறைப்படி 155 கிளைகளும் என மொத்தமாக 198 கிளைகளின் தொழிற்பாடு கணனி மயமாக்கப்பட்டுள்ளன. மனித வலு மூலம் 94 கிளைகள் (32.2%) இன்னும் செயற்படுகின்றன.

இலங்கை வங்கி 1945ஆம் ஆண்டு மாசி மாதம் 2ஆம் திகதியன்று தனது 5ஆவது கிளையை யாழ்ப்பாணத்தில் நிறுவியது. ஆரம்பத்தில் மிகச் சிறிய வாடகைக் கட்டடத்தில் இயங்கிய இக்கிளை நாளடைவில் நகரின் முக்கியமான பகுதியில் தனக்கெனச சொந்த இடத்தைக் கொள்வனவு செய்து பெரிய கட்டடம் அமைத்து யாழ்.மக்களுக்கு 57 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றி வருகின்றது. துரித வளர்ச்சி காரணமாக இக்கிளை மேற்றரக்கிளையாகத் தரமுயர்த்தப்பட்டது.

1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரமும் அதன் பின்பு ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக வங்கியின் தொழிற்பாட்டில், குறிப்பாகச் சர்வதேசசேவை, கடன் வழங்கல் போன்றவற்றில் மந்தநிலை ஏற்பட்டது.

போர்க்காலச் சூழ்நிலையால் வாடிக்கையாளரின் கொடுப்பனவு, ஓய்வூதியர்களின் கொடுப்பனவு போன்றவற்றை மேற்கொள்வதற்காக எமது ஊழியர்கள் கோட்டை என்றும், குருநகர் என்றும் துணிந்து சென்று பணியாற்றியதை எமது வாடிக்கையாளர்கள் மறக்கமாட்டார்கள்.

யாழ்.மக்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் தமது நிவாரணத்தைப்பெற ஒரு நடமாடும் செயலகம் போன்று எதுவித ஊழலுமின்றிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்கியதை எமது வாடிக்கையாளர்கள் மறக்கவில்லை. வாடிக்கையாளரின் ஏகோபித்த ஆதரவால் யாழ்ப்பாணத்தில் எமது வங்கிக்கிளை ஏனைய வங்கிகளைவிட முன்னணியில் திகழ்கிறது.

குடாநாட்டில் படிப்படியாக ஏற்பட்ட முன்னேற்றம் காரணமாகவும், குறிப்பாகத் தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழல் காரணமாகவும் எமது கிளைத் தொழிற்பாட்டில் முன்னேற்றம் காணப்படுகின்றது. மக்களின் அவசர, அவசிய பணத்தேவைகள் எவையாகவிருப்பினும் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கெனத் தங்க நகை ஈட்டுக்கடன்சேவை முதல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் வாடிக்கையாளரின் நலன்கருதிச் சனிக்கிழமை தோறும் வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

அரசாங்க ஊழியர்கள், வர்த்தகத்துறை ஊழியர்கள் மற்றும் யாபேரும் தமது வங்கித்தேவைகளை இலகுவாகவும், சுகமாகவும் பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாட்டுப் பணத்தைத் தரக்கூலி எதுவுமின்றி இலங்கை ரூபாவாக மாற்றும் சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து இங்குவரும் பிரயாணிகளுக்கு பிரயாணக் காசோலைகளை இலங்கை ரூபாவாக மாற்றிக் கொடுத்தல், வெளிநாட்டுக் கல்வி கற்கத் தேவையான செலவாணிப்பத்திரம் சார்பான பண மாற்றல்களைச் செய்தல், அந்நிய நாணய வைப்புச் சேவை ஆகியனவும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 24.05.2002 அன்று தன்னியக்க பணம் மீளப்பெறும் சேவை வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளரான திருமதி க.துரைராசா அவர்களால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. குறித்த இயந்திரத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் வங்கிக்கு வெளியில் இரவு பகலாக இச்சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம். அதாவது பணம் மீளபெறல், குறிக்கப்பட்ட கணக்குகளிற்கிடையில் நிதிமாற்றம், கணக்கின் நிலுவையை அறிதல், கடந்த சில நாள்களில் கொடுக்கல் வாங்கல் உள்ளடக்கிய கணக்குக் கூற்றைப் பெறுதல் போன்ற பல சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். வங்கிச் சேவையைப் பெறுவதில் உள்ள தாமதம், சிரமம் போன்றவை தவிர்க்கப்படும்.

இன்று 01.07.2002 அன்று கணனி மயமாகும் எமது கிளைச் செயற்பாடுகள் இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் J.S.ரணசிங்க அவர்களால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும். இதன் மூலம் வாடிக்கையாளர்கள் வங்கியின் 16 கிளைகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளமுடியும்.

*வங்கிச் சேவைகள் கனணிமயமாக்கம் மூலம் வாடிக்கையாளருக்குப் பல நன்மைகள் உண்டு. அவற்றில் சில வருமாறு:-*

✷ வாடிக்கையாளர்கள் மின் தொடருளி மூலம் (ONLINE BRANCHES) கணனி மயமாக்கப்பட்ட எந்தக் கிளையிலும் தமது கணக்கின் பிரதிக்கூற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

✷ பணமாற்றல்கள் இலங்கையிலுள்ள அனைத்து வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறை (SLIPS)Sri Lanka Inter Bank Payments System மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

✷ யூனிபாங் (Uni Bank) திட்டமூலம கணனி மயப்படுத்தப்பட்ட எமது கிளைகளுக்குத் துரித கதியில் பணமாற்றல்களை மேற்கொள்ளமுடியும்.

✷ எமது வாடிக்கையாளர்கள் மின்தொடருளிமூலம் (ON LINE BRANCHES) கணனி மயமாக்கப்பட்ட எந்தக் கிளையிலும் பணவைப்பு, பணம் மீளப் பெறுதல் செய்யலாம். தன்னியக்க முறையில் அவரது கணக்கில் வரவு/பற்று (CREDIT) (DEBIT) செய்யப்படும்.

✷ கணக்குக் கூற்று தினந்தோறும், கிழமைதோறும் தேவைக்கேற்றபடி மின்னியல் தபால (E.Mail), தொலைநகல் (Fax), வங்கி களுக்கிடையில் நிதித் தொலைத் தொடர்பு சமுகம் (SWIFT) மூலம் பெற்றுக்கொள்ளமுடியும்.

✷ மின்தொடருளி மூலம் கணனி மயப்படுத்தப்பட்ட கிளைகளில் (On Line Branches) பாவனைக் கட்டணங்களைச் செலுத்தமுடியும். உடனடியாகக் குறிப்பிட்ட ஸ்தாபனத்தின் கணக்கில் வரவு(Credit) வைக்கப்படும்.

✷ மின் தொடருளிமூலம் கணனி மயப்படுத்தப்பட்ட எந்தக் கிளையிலும் வாடிக்கையாளரின் கையொப்பத்தை உறுதி செய்த பின்பு பணம் செலுத்தப்படும்.

✷ சேமிப்புக்கணக்கில் தினந்தோறும் உள்ள நிலுவைக்கு (Daily Balance) வட்டி கணிக்கப்படும்.

**க. உலகநாதன்** *(AIB Sri-Lanka)*
*முகாமையாளர்,*
*இலங்கை வங்கி மேற்றரக்கிளை,*
*யாழ்ப்பாணம்.*

# கல்விச்சாலைக் காட்சிகள்



கல்வியங்காடு கஸியோ பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு நிகழ்வில் இடம்பெற்ற வினோத உடைப் போட்டியில் கலந்துகொண்ட சிறுவர், சிறுமியருடன் போட்டி ஒருங்கிணைப்பாளர் உரையாடியபோது எடுத்தபடம். (ஒ-180)



வட்டுக்கோட்டை கார்த்திகேயா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களில் ஒருவருக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ-ரி)



கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் அண்மையில் இடம்பெற்ற இராமகிருஷ்ண ஜெயந்தி மற்றும் புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், அருகில் வித்தியாலய அதிபர் இ.சிவபாதசேகரம் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஒ-69)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ஒரு காதலின் கதை

இலங்கை இனப்பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்தது. அதன் ஆரம்ப காலத்தைச் சித்திரிப்பது. உண்மை யான மனித்ர்களையும், உண்மைச் சம்பவங்களையும் கொண்டது. 350 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். (5297)

## தவறிவிட்டது

லோகேஸ்வரன் பிறேம்குமார் என்ப வரது தே.அ.அ இல.(782720627V) வி.அ.அ.(0902000249) என்பன அடங் கிய Brown நிற பேர்ஸ் ஒன்று யாழ் நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து 89/2, பலாலி வீதி, கந்தர்மடம் எனும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (5423)

## மணமகள் தேவை

1972 பூரம் செவ்வாயற்ற, கிரக பாவம் குறைந்த 5' 5" உயரம் Engineer மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. தொடர்பு: விள. இல.1554, மே/பா உதயன், யாழ்ப்பா ணம். (5427)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியிலிருந்து 200யார் தூரத்தில் 1 1/2 பரப்புக் காணி கல்வியங்காட்டில் விற்பனைக்கு உண்டு. 3 அறைகளுக்கும் ஒரு HALLக்குமான அத்திவாரம், கிணறு, மலசலகூடம், மின்சாரம், வாகனப் போக்குவரத்துப்பாதை வசதி என்பன உண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்வதால் உடன் விற்பனை. விவ ரங்களுக்கு: க.அம்பிகைபாகர், 38, சிவன்கோயில் றோட், திருநெல்வேலி தெற்கு. (5429)

## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, தாளையடி ஒழுங் கையில் 3 பரப்பில் உள்ள கல் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு ரே. தம்பித்துரை 26 A, கில்டன் பிளேஸ், பம்பலப்பிட்டி, கொழும்பு4. ஒரு வாரத் திற்குள் சந்திப்போர் கீழ்வரும் விலா சத்தில் வந்து சந்திக்கலாம். ரே. தம்பித்துரை, தாளையடி ஒழுங்கை, திருநெல்வேலி. தொலைபேசி: 01-552413, 01-507486) (5425)

## விற்பனைக்கு

கம்பி, தகட்டுமெசின், பவுண் அடிக் கும் டைமெசின்16 கசட்டுடன் விற் பனைக்கு உண்டு. தொடர்பு: V.V.மகா லிங்கம், 420/1,வெள்ளி விலாஸ் ஓடை, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (5401)

ஆபிரிக்க லவ்பேட்ஸ், ஜாவாப் பா, விஞ்சேஸ் குருவிகள், பல இனங் களில் கலர் மீன்கள், மீன்தொட்டி கள், மோட்டர்கள், மீன்தொட்டிக்குரிய அழகுசாதனப் பொருட்கள் என்பன விற் பனைக்கு உண்டு. தொடர்பு:-40/17, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (5293)

FD125 (G.S மொடல்), CUB90 மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்கு உண்டு. (கொழும்பிலிருந்து தருவிக் கப்பெற்றவை) தொடர்பு: கேசவன், பாலமுரளி, மஞ்சத்தடி, இணுவில். (5416)

கொழும்பிலிருந்து கொண்டுவரப் பட்ட 5K.V KUBOTA JAPAN டைன மோவுடன் கூடிய புதிய KUBOTA RX-125 JAPAN டீசல் ஜெனரேற்றர் (R.P.M.-2200) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 320,பலாலி வீதி, ஆலடிச்சந்தி, கந்தர்மடம். (5399)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா இராசையா

அராலி வடக்கைச் சேர்ந்த சின்னையா இராசையா அவர்கள் கடந்த 26.06.2002 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திரு.திருமதி சின்னையா - தெய்வானை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் வேலாயுதம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோ தரரும், நாகசோதி(கனடா), விசயசோதி(கனடா), சிறீஸ்கந்தன் (கனடா), வசுமதி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(02.07.2002) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு அராலியிலுள்ள அவரது சகோதரர் வேலாயுதத் தின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அராலிப் பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ள வும்.

*அராலி வடக்கு,*
*வட்டுக்கோட்டை.* (5424)

தகவல்:
சி.வேலாயுதம் *(சகோதரர்)*

## திருமதி சிவப்பிரகாசம் விசாலாட்சியம்மை

வேலணை மேற்கு, முடிப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாக வும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபபிரகாசம் விசாலாட்சியம்மை 29.06.2002 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சதாசிவம்பிள்ளை விதானையார்- பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாக லிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் லலிதாம்பிகை, காலஞ்சென்ற வர்களான பாலசூரியன், தற்பரானந்தம் மற்றும் வேதநாயகி, கிருபானந் தன், தையல்நாயகி, கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும் கணபதிப்பிள்ளை, தவமணிதேவி, ஸ்ரீ பராபரன், சோமாவதி, குகவரத ராசா, சந்தனகுமாரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சுசிகரன், காலஞ் சென்ற குஞ்சிதம் மற்றும் சித்திராதேவி, சசிகுமார், வாகீசன், வாரணி, வாசகன், விஜயலட்சுமி, சிவசுந்தரம், சிவதாஸ், தயாராணி, தயாபரன், சயா, சுசிவா, லோசனி, கலாதரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான மனோன்மணியம்மா, இரத்தினம்மா, மகாலிங்கம் (விதானையார், சமாதான நீதிவான்) மற்றும் சவுந்தரநாயகியம்மை ஆகி யோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், வேலாயுதம், மங்களநாயகி, பரஞானசம்பந்தபிள்ளை, ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவரது தகனக்கிரியைகள் நேற்று(30.06.2002) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முடிப்பிள்ளையார் கோயிலடி,*
*வேலணை மேற்கு;*
*வேலணை.*

தகவல்:
திருமதி ப.சவுந்தரநாயகியம்மை
*(சகோதரி)* (5428)

## நாகலிங்கம் சுப்பிரமணியம் (மணியம்)

## திருமதி சுப்பிரமணியம் செல்வமலர் (நோனா)

கொக்குவில், சம்பியன் லேனைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் காளி கோயிலடியை வதிவிடமாகக் கொண்டவரும் முன்னாள் அரச ஊழியரும், 'பெனின்சுலா' கண்ணாடித் தொழிற்சாலை முன்னாள் ஊழியரும், கொக்குவில் இந்துக் கல்லூரிப் பழைய மாண வரும், பிரபல உதைபந்தாட்ட வீரருமான நாகலிங்கம் சுப்பிரமணி யம் (மணியம்) அவர்களும், அவர்தம் பாரியாரான திருமதி சுப்பிரமணி யம் செல்வமலர் அவர்களும் 28.06.2002 வெள்ளிக்கிழமை கண்டாவில் வாகன விபத்தில் சிக்கி அகாலமரணமடைந்துவிட்டனர்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.* (C/22756)

*தகவல்:*
து.வைத்திலிங்கம்
*மேலதிக அரசாங்க அதிபர்.*
ப.ஜெகநாதன் *(ஆசிரியர்)*

## நுளம்புவலைகள் விநியோகம்

வன்னியிலிருந்து வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீளக்குடியமர்ந் துள்ள வறுமைக்கோட்டின்கீழ் உள்ள ஆயிரம் குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் சுகாதாரத் திணைக்களத் தினால் வழங்கப்படவுள்ளன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்ட நுளம்பு வலைகளில் 400 நுளம்பு வலை கள் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் - விரைவில் ஏனைய 600 குடும்பங்களுக்கு வழங்கப் படவுள்ளதாகவும்- சுகாதாரத்திணைக் கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-117)

## தென்மராட்சி மேற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

## முக்கிய அறிவித்தல்

(23.06.2002) அன்று கிளைக்குழு உறுப்பினர் தெரிவு நடைபெறாம லிருந்த கைதடி நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கைதடி நாவற்குழி தெற்கு கிளைகளைச் சேர்ந்த பூரணமான அங்கத்தவர்கள் தங்கள் கிளையின் கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்கு சாதகமான ஒரு திகதியைக் கலந்தாலோசித்து முடிவு செய்வதற்கு 03.07.2002 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கைதடிச் சந்தியிலுள்ள தற்காலிக த. காரியாலயத்தில் சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக கொள்கின்றேன்.

*தென்மராட்சி மேற்கு,*
*ப.நோ.கூ.சங்கம், கைதடி.* (C-22747) - தலைவர்.



உ
சிவமயம்

## காரைநகர் - களபூமி
## திக்கரை முருகமூர்த்தி கோயில்
### சித்திரபானு வருஷ
## பிரமோற்சவ விஞ்ஞாபனம்

*முருகன் அடியார்களே!*

ஸ்ரீமத் தக்ஷண கைலாயம் என வழங்கப்பெறும் இலங்கா தூவீகத்தின் வடபால் அமைந்த யாழ்ப்பாண நகரின் வடமேல் பாகத்தில் காரைநகர் திக்கரைப் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளி தம் அடியவர்களின் துயரைத் தீர்த்து அருள்பாலித்து விற்றிருக்கும் கலியுகவரத ஜெகநாத சுப்பிரமணியப் பெருமானுக்கு சித்திரபானு வருஷ பிரமோற்சவம் ஆனி மாதம் 17ஆம் நாள் இன்று (01.07.2002) திங்கட்கிழமை ஷஷ்டி திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் கூடிய சுபவேளையான முற்பகல் 10.00 மணிக்கு துவஜா ரோகணம் கொடியேற்றம் நடைபெற்று தொடர்ந்து பதினொரு தினங்களுக்கு பிரமோற்சவம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

### கிரியா கால விவரம்

ஆனி 16ஆம் நாள் (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு சாந்திக்கிரியைகள் நடைபெற்றன.
ஆனி 17ஆம் நாள் இன்று (01.07.2002) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.
ஆனி 19ஆம் நாள் (03.07.2002) புதன்கிழமை கைலாச வாகன திருவிழா
ஆனி 20ஆம் நாள் (04.07.2002) வியாழக்கிழமை குருந்தமரத் திருவிழா
ஆனி 22ஆம் நாள் (06.07.2002) சனிக்கிழமை மாம்பழத் திருவிழா
ஆனி 23ஆம் நாள் (07.07.2002) ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழா
ஆனி 24ஆம் நாள் (08.07.2002) திங்கட்கிழமை சப்பறத் திருவிழா
ஆனி 25ஆம் நாள் (09.07.2002) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு தேர்த்திருவிழா
ஆனி 26ஆம் நாள் (10.07.2002) புதன்கிழமை 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழா
பிற்பகல் கொடியிறக்கம், சண்டேஸ்வரர் உற்சவம், சிவாசாரியார் உற்சவம்.
ஆனி 27ஆம் நாள் (11.07.2002) வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழா
ஆனி 32ஆம் நாள் (16.07.2002) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு வைரவர் பொங்கல்.

- காலை திருவிழா மு.ப.8.00 மணிக்கு ஆரம்பமாகும்.
- மாலை திருவிழா பி.ப.6.00 மணிக்கு நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக திரண்டுவந்து பூக்கள், பால், தயிர், இளநீர், பழவகைகள், தேங்காய் எண்ணெய், கற்பூரம் முதலிய பூசைப் பொருள்களைக் கொடுத்துதவி எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகின்றோம்.

களபூமி, காரைநகர். (5422) - ஆலய பரிபாலகர்.

அதிக காரமின்றி கூடிய குணத்தைக் கொடுக்கும்
சர்வோலேப
• பல்வலி • தலைவலி
• சுளுக்கு • வாதப்பிடிப்பு
• மூட்டுவலி • இரத்தக்கண்டல்
• தசைப்பிடிப்பு
• தடிமலும் தொண்டைக் கரகரப்பும்
Manufactured by
SAHANA INDUSTRIES
309, PANADURA ROAD, HORANA. TEL: 034-61144
NEED DISTRIBUTING AGENT FOR JAFFNA
(C-22750)

# வாழைச்சேனை அசம்பாவிதங்களுக்கு பொறுப்பானோரை இனங்காணுங்கள்

## ரெலோ கோரிக்கை

மட்டக்களப்பு,ஜூலை1

வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்குக் காரணமானவர்கள் உடனடியாக இனங்காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது ரெலோ அமைப்பு.

ரெலோ அமைப்பின் சார்பில் அதன் பிரதித் தலைவரான இந்திரகுமார் பிரசன்னா விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே ஓட்டமாவடி வாழைச்சேனைப் பகுதியில் கடந்த 27ஆம், 28ஆம் திகதிகளில் நடைபெற்ற சம்பவங்கள் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்துவனவாக உள்ளன.

ஹர்த்தால் என்பது அஹிம்சை ரீதியிலான போராட்டம். அது வன்முறைப் போராட்டமாக மாறுவதை அனுமதிக்கமுடியாது. அதேவேளை, நடைபெற்ற சம்பவங்களைக் கூர்ந்து அவதானிக்கையில் சமாதான நடவடிக்கைகளைச் சிதைக்கும் கபடநோக்கத்துடன் இவை முன்கூட்டியே திட்டமிடப்பட்டவை என நினைக்கத் தோனறுகின்றது.

மறுபுறம், நெருக்கடியான கால கட்டத்தில் பொறுப்புடன் கருத்துக் கூறவேண்டிய அரசியல்வாதிகள் நிதானமிழந்து - பக்கச்சார்பாக - கருத்துகளை வெளியிடுவது வரவேற்கத் தக்கதல்ல. அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்ட கருத்துகள் முஸ்லிம் சமூகத்துக்கு மாத்திரமே உரிய அமைச்சர் என அவரைச் சிந்திக்கத் தோன்றியுள்ளன.

அதேவேளை, நடுநிலை பேண வேண்டிய கண்காணிப்புக்குழு உறுப்பினர் அப்துல் ரஹ்மான் நடுநிலை தவறி வெளியிட்ட கருத்துகள் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியுள்ளன. அரசதரப்புப் பிரதிநிதியான இவர், மூவின மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தவேண்டிய தனது கட்டுப்பாட்டிலிருந்து தவறி, ஓர் இனத்துக்கு மாத்திரமே தன்னைப் பிரதிநிதியாகக் கருதி வெளியிட்ட கருத்துகள் கண்டனத்துக்குரியவை. தனது பொறுப்பிலிருந்து அவர் தவறிவிட்டார் என்பதையே இது புலப்படுத்துகின்றது.

இத்தகைய போக்கு தமிழ்மக்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தம்மிடமுள்ள ஆயுதங்களைக் கைவிடக்கூடாது என்ற கருத்து மேலோங்கவே வழி வகுக்கும். இவ்வேளையில் நடந்த சம்பவங்களில் பாதிக்கப்பட்ட இரு இனங்களையும் சேர்ந்த மக்களுக்கு எமது கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் கலவரங்கள் உக்கிரமடையக் காரணமாயிருந்தவர்கள் பொலிஸாராயினும், வேறு எவராயினும் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கோருவதுடன், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நஷ்டஈட்டை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## மருத்திருப்பதியில் நாளை திருவிழா

நாளை 2ஆம் திகதி மடுத்திருப்பதி திருவிழா சிறப்பாக நடைபெறத் தேவையான ஏற்பாடுகளை மன்னார் அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் தலைமையிலான குழு செய்துள்ளது.

தற்போதைய சமாதான முன்னெடுப்புக் காரணமாக சுமார் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் நாளை ஒன்றுகூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. பக்தர்களின் போக்குவரத்து வசதிக்காக தலைமன்னார் - மதவாச்சி வீதியில் இருந்து மடுத்திருப்பதிக்குச் செல்லும் பிரதான பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இன்று முதலாந் திகதி மாலை ஆராதனை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை ஆயர் இல்லம் செய்துள்ளது. இம்முறை நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மடுத் திருப்பதிக்குப் போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. (ஐ)

## கல்முனை, அம்பாறை வழியாகப் போக்குவரத்து

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு, திருகோணமலை உட்பட தூர இடங்களுக்கான பஸ் சேவைகளும், வாகனப் போக்குவரத்துகளும் நேற்று கல்முனை, அம்பாறை வழியாக நடைபெற்றன.

வாழைச்சேனையூடான போக்குவரத்து இன்னமும் ஆரம்பமாகாததால் தூர இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் மேற்குறிப்பிட்ட வழியாக இடம்பெற்றன. வியாழனன்று இடம்பெற்ற ஹர்த்தாலைத் தொடர்ந்து பயணம் செய்யமுடியாது தடைப்பட்டிருந்த வாகனங்களை சனி மாலை விடுதலைப் புலிகள் பாதுகாப்பாக அழைத்து வந்துவிட்டனர். இவ்வாறே வெலிகந்தையில் தடைப்பட்டிருந்த வாகனங்களைப் படையினர் பாதுகாப்பாக அழைத்து வந்துவிட்டனர். (ஐ)

## தெருக்கூத்து முடிவுகள்

தெருவெளி நாடகக் குழுக்களுக்கிடையே மனித முன்னேற்ற நடுநிலையம் நடத்திய 'வாழும் உரிமையை உறுதிப்படுத்துவோம்' என்ற தலைப்பிலான தெருக்கூத்துப் போட்டிகள் நேற்று கியூடெக் மண்டபத்தில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களை முறையே, இராஜ கிராம தெருக்கூத்துக் குழு, திருநகர் தெருக்கூத்துக் குழு, கைதடி சரஸ்வதி தெருக்கூத்துக்குழு ஆகியன பெற்றுக் கொண்டன. (எ-12-ரி)

# தமிழர்-முஸ்லிம்கள் இணைந்தே இனி ஹர்த்தால்கள் அனுஷ்டிப்பு

## கல்முனை மாநாட்டில் முடிவு

மட்டக்களப்பு,ஜூலை1

தமிழ் முஸ்லிம் மக்கள் இணைந்தே எதிர்காலத்தில் ஹர்த்தால்களை நடத்துவது என்று கல்முனை சமாதான மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தலைமையில் இச் சமாதான மாநாடு சனிக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா, அ.சந்திரநேரு எம்.பி., சட்டத்தரணி எம்.ஐ.அன்வர் இஸ்மாயில், பொலிஸ் அதிகாரிகள், அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர் ஏ.ஆர்.ஏ.அஸீஸ், பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் ஆகியோர் கலந்து கொண்டனர். முக்கிய பிரமுகர்கள், ஆலய தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் தலைவர்கள் முதலானோரும் கலந்து கொண்டனர்.

இனிமேல் ஹர்த்தால்களை இயலுமானவரை தவிர்த்துக் கொள்வதெனவும், தவிர்க்கமுடியாதவாறு ஹர்த்தால் நடத்துவதானால் 24 மணிநேர முன்னறிவித்தல் வழங்கி நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கல்முனைப் பிரதேச முஸ்லிம் வர்த்தகர்கள், பொதுமக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விரைவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலனுடன் சந்திப்பொன்று ஏற்பாடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.பளீல் தலைமையில் இரு சமூகத்தவர்களுமடங்கிய சமாதானக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது. (ஐ-6-9)

## டிப்போவுக்குக் காவல்

காத்தான்குடி,ஜூலை1

காத்தான்குடி நியூ ஈஸ்டன் பஸ் கம்பனி டிப்போவிற்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

டிப்போவை தீயிட்டு அழிக்கப்போவதாகக் கிடைத்த தகவலையடுத்தே இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காத்தான்குடி நகரில் நான்காவது நாளாக நேற்றும் இராணுவத்தினர் தீவிர பாதுகாப்புக் கடமையிலீடுபடுத்தப்பட்டிருந்தனர். ஊரடங்கை மீறி வீதிகளில் நடமாடியோர்மீது தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

## மனமார வாழ்த்துகின்றோம்



உயர்திரு. வீ.ஆனந்தசங்கரி

*(நாடாளுமன்ற உறுப்பினர்)*

அவர்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டமையையிட்டு வன்னி மாவட்டத் தந்தையாகிய அவரை நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

பச்சிலைப்பள்ளி வாழ் மக்களும் பொது நிறுவனங்களும்.

(5444)

*முக்கிய குறிப்பு:*

எதிர்வரும் 04.07.2002 வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு புலோப்பளை தேவாலயத்தில் மக்கள் அவருக்கு வரவேற்பளிக்கவிருக்கின்றனர்.

## சேவை நலன் பாராட்டு



சரவணையூர்

உயர்திரு.

குழந்தைவேலு கணேசலிங்கம் B.A.

Dip. in Edu. S.L.P.S. G.I.

அவர்கள்

யா/சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலயத்தின் அதிபராக இருந்து பின்னர் யா/வேலணை சேர் வை.து.ம.ம. வித்தியாலயத்தின் அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெறுகின்றார். சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்திருப்பணியில் தமது சேவையை ஈடுபடுத்தி வந்ததோடு அதேபோன்று தமது ஓய்வுக்காலத்திலும் மேன்மேலும் ஆலயத் திருப்பணிக்குத் தமது சேவையை நல்கி எல்லா நலன்களும் பெற்று வாழவேண்டும் என கதிர்வேலாயுத சுவாமியை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சரவணை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயில் அறங்காவற் சபையினர்.

(5441)

சாவகச்சேரி சங்கத்தானை

## கந்தசுவாமி கோயில்

## வருடாந்த அலங்கார உற்சவம் - 2002

நிகழும் சித்திரபானு வருடம் ஆனி மாதம் 17ஆம் நாள் இன்று (01.07.2002) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அலங்கார உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். அடியார்கள் தினமும் பங்குபற்றி முருகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும்வண்ணம் வேண்டுகிறோம்.

- ஆலய பரிபாலனசபை.

விளம்பர அன்பளிப்பு:

பாவா தொலைத்தொடர்பு சேவை & மலரி கோணர்

ஆசிரியர் வீதி, சாவகச்சேரி.

(5443)


ராஜா யாழ்ப்பாணம்.

4ஆம் திகதிவரை

குணால், மோனல் மற்றும் பலர் நடிக்க

பேசாத கண்ணும் பேசுமே...

காட்சிகள்: தினசரி 10.30, 2.30

சனி, ஞாயிறு 10.30, 2.30, 5.30

(C-22753)

நிறைஞ்சனாஸ் சாவகானை

ஸ்ரீகாந்த், பூமிகா, ரகுவரன், விவேக் நடிக்க

ரோஜாக்கூட்டம்

(சினிமா)

தினசரி: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்) (C-22794)

நாகம்ஸ் சுன்னாகம்

நவரச நாயகன் கார்த்திக் (இருவேடம்), ரோஜா, கௌசல்யா நடிக்க

சந்தித்தவேளை

(சினிமா)

காட்சிகள்: 11.00, 3.00 (புதிய நேரம்)

3ஆம் திகதிமுதல் ராஜ்ஜியம்

(5307)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
| --- | --- |
| 03 - 08 - 1923 | 12 - 07 - 2001 |

### திருமதி தவமணி சுப்பிரமணியம்

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி)*

திதி: ஸப்தமி 01.07.2002

எம்மைத் தவிக்கவிட்டுச் சென்ற தாயே!
உங்கள் நினைவுகளை எம் இதயத்தில்
இருத்திவிட்டு எங்கு நீ சென்றாயோ?
உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள் நெஞ்சங்களில் நிழலாடும்

*உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*"பிரபை மஹால்"*
*உரும்பிராய் சந்தி,*
*உரும்பிராய்.*

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5445)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### சிதம்பரப்பிள்ளை சிவக்கொழுந்து

யாழ்ப்பாணம், ஆறுகால்மடத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவக்கொழுந்து நேற்று (30.06.2002) ஞாயிற்றுக்கிழமை புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் அன்பு மனைவியும் குணரெட்ணம், மகேஸ்வரி, நடராஜா, காலஞ்சென்ற மகாதேவா, சண்முகநாதன், நித்தியலக்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகம்மா, சண்முகராசா, மகேஸ்வரி, காலஞ்சென்ற கனகாம்பிகை, தங்கம்மா, சிவபாதம் ஆகியோரின் அருமை மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2002) திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் புத்தளத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*25/1,லோட்டஸ் வீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.*

பிள்ளைகள், மருமக்கள்.
*இல.34,மூன்றாம் குறுக்குத்தெரு,*
*3ஆம் ஒழுங்கை, புத்தளம்.*

(5442)

### திருமதி வாலாம்பிகை சின்னராசா

**(சின்னத்தங்கைச்சி)**

வயாவிளான், கண்ணகை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது திருநெல்வேலி அரசடி ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வாலாம்பிகை சின்னராசா 29.06.2002 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

*அரசடி ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு.*

ஆ.கந்தசாமி ஆச்சாரியார்
(மருமகன்)

(5439)

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைபேண விடுதலைப் புலிகள் திடசங்கற்பம்

காரைதீவு,நிந்தவூர்,ஜூலை1

முஸ்லிம்கள் தொடர்பாக எமது தலைவரிடமிருந்து கண்டிப்பான உத்தரவு கிடைத்துள்ளது. முஸ்லிம்களுடன் இன சௌஜன்னியத்துடன் கண்ணியமாக நடக்கவேண்டும். தலைவருடன் மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அனைவரும் மதித்துச் செயற்படவேண்டும் என்று கட்டளை வந்திருக்கிறது. எனவே, எந்தவிதமான தமிழ் - முஸ்லிம் வன்முறைகளுக்கும் நாம் இடமளிக்கமாட்டோம்.

- இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா கூறினார்.

கல்முனைப் பிராந்திய சமாதானக் கூட்டம் அம்பாறை மாவட்ட எம்.பி., சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸின் ஏற்பாட்டில் சனியன்று மாலை கல்முனை பிரதேச செயலகக் கட்டடத்தில் நடைபெற்றது.

"விடுதலைப் புலிகளின் மட்டு- அம்பாறை சிறப்பு அரசியல் பொறுப்பாளர் கரிகாலன் அண்ணனுடன் இப்பகுதி முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்த முயற்சி செய்வேன்" என்று பாவா கூறினார்.

பாவா அங்கு மேலும் பேசியதாவது:-

"அன்று ஆயுதங்களுடன் நடமாடிய நாம், உறங்கும் போதும் ஆயுதத்தோடுதான் உறங்கினோம். இன்று எம்மிடம் ஓர் ஆயுதமும் இல்லை. ஆயுதமில்லாமல்தான் இப்பகுதியில் உலா வருகிறோம். அனைத்தும் மக்களை நம்பியே.

எமது நடவடிக்கைகள் தனியே தமிழ் மக்களுக்கானது என்று யோசிக்காதீர்கள். எமது அனைத்துப் போராட்ட நடவடிக்கைகளும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கானதே அன்றி தமிழர்களுக்கானது மட்டுமல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன் அதன் ஓர் அங்கமே பிரபா - ஹக்கீம் ஒப்பந்தம்.அதனை எந்த விதத்திலும் பாதிக்க இடமளிக்கமாட்டோம். யாராவது உடைக்க நினைத்தால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அக்கரைப்பற்றில் கொடியை எரித்த சம்பவத்திற்கு நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்டு கலைந்து போகக் கூறினேன். எமது அலுவலகத்திலிருந்து 200 யார் தூரத்தில் வெடிச சத்தங்கள் கேட்டன. எனினும் நாம் அமைதியாக-பொறுமையாக-இருந்து உறவு பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக சிலவற்றைச் சகித்துக் கொண்டு செயற்பட்டு வருகிறோம்.

### பள்ளிவாசலுக்கு வருவேன்

முஸ்லிம் சகோதரர்களே! உங்கள் பிரச்சினைகளை எம்மிடம் சொல்ல விரும்பினால் எங்கு வேண்டுமானாலும் வருவேன். நீங்கள் எமது அலுவலகத்திற்குத்தான் வரவேண்டுமென்றில்லை. பள்ளிவாசலுக்குள் மக்களைக் கூட்டிவைத்துவிட்டு என்னை அழையுங்கள் வருகிறேன். மனம்விட்டுக் கதையுங்கள்; பேசுங்கள். நானும் எனது மட்டத்திலான அதிகாரிகளுடன் செய்யக்கூடிய அத்தனை உதவிகளையும் செய்வேன். பயப்படவேண்டிய அவசியமில்லை. தமிழ் - முஸ்லிம் மக்கள் இணைந்துதான் இப்பகுதியில் வாழவேண்டும்.

ஹர்த்தால் குறைக்கப்பட வேண்டும் என்று அண்ணன் கரிகாலன் தெரிவித்திருக்கிறார். ஒரு வாரத்தில் 3,4 ஹர்த்தால்கள் என்றால் பாதிக்கப்படுவது அனைத்து இன மக்களுமே. இனிமேல் ஹர்த்தால் 24மணி நேரத்திற்கு முன் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும். ஓர் இனத்திற்கு என்று ஹர்த்தால் இல்லை. இனிமேல் இரு இனங்களும் சேர்ந்தே ஹர்த்தால் செய்யவேண்டும்; புரிந்துணர்வு அவசியம்.

ஹர்த்தால் நேரத்தில் முஸ்லிம்களின் தொழுகைக்குக் கட்டாயம் இடமளிக்க வேண்டும் எனப் போராளிகளுக்குக் கண்டிப்பான உத்தரவிட்டிருக்கின்றோம். முஸ்லிம்களின் ஒத்துழைப்பைப் பெறும்படி கூறியுள்ளோம்.

- என்றார். (ஐ-6-9)

## கண்டா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. காரைச் செலுத்திச் சென்ற இவர்களது மகன் தெய்வாதீனமாக உயிர்தப்பிவிட்டார். ஆனால், அதே காரில் பயணஞ்செய்த அவரது மனைவியும் குழந்தையும் படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

எஸ்செல்வி (வயது 32), எஸ்.கஸ்தூரி (வயது 5) இருவருமே படுகாயமடைந்தனர்.

உயிரிழந்த நாகலிங்கம் சுப்பிரமணியம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். உதைபந்தாட்ட வீரரான இவர் சிறந்த நாடகக் கலைஞரும் ஆவார். (ஐ-ரி)

## தங்காலைச் சிறைச்சாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பப்பட்டிருக்கிறது.

தங்காலை மாநகரசபை எல்லைக்குள் ஊரடங்கு உத்தரவு உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளரின் அலுவலகம் அறிவித்திருக்கிறது.

வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்து, வீடுகளில் தங்கியிருந்து படையினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தங்காலை நகரவாசிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

படைகளில் இருந்து தப்பியோடி குற்றச்செயல்களில் ஈடுபட்டிருந்தபோது கைதுசெய்யப்பட்ட கைதிகளே தங்காலைச் சிறையின் தீவிர பாதுகாப்புப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தக் கைதிகளே அங்கு பெரும் கலகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

முதலில் காவலர்களைத் திடீரெனத் தாக்கிய கைதிகள், அவர்களின் ஆயுதங்களைப் பறித்தெடுத்துக் கொண்டு அங்குள்ள ஆயுதக் களஞ்சியப் பகுதிக்குச் சென்று களஞ்சியத்தை உடைத்து அங்கிருந்த ஆயுதங்களையும் கைப்பற்றியிருக்கின்றனர்.

ரி-56 ரக துப்பாக்கிகள் பன்னிரண்டையும் அவற்றுக்கான 25 ரவைக்கூடுகளையும் கைதிகள் கைப்பற்றியதாக ஒரு தகவல் தெரிவித்தது.

கைப்பற்றிய ஆயுதங்களைப் பயன் படுத்தி கைதிகள் சிறைக்கு வெளியே கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸார் மற்றும் படையினரை நோக்கி தாக்குதலை ஆரம்பித்தனர் என்றும் -

அதனையடுத்து கைதிகளுக்கும் படையினருக்கும் இடையே கடுஞ் சண்டை மூண்டதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

சிறைக்கு வெளியே முப்படையினரும் குவிக்கப்பட்டிருக்கின்றனர். கைதிகள் சிறைக்குள் இருந்தவாறு தொடர்ந்து தாக்குதலை நடத்திவருகின்றனர்.

கைதிகள் எவரும் சிறையில் இருந்து தப்பிச் செல்லவில்லை என்றும் -

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும் -

பொலீஸார் கூறுகின்றனர்.

சுமார் ஒன்பது பேர் வரை கைதிகளால் பணயம் வைக்கப்பட்டிருப்பதாக இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஒரு சிறைக்காவலரும், தங்காலைப் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரும் தாக்குதலில் காயமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

10 பெண் கைதிகள் சிறையில் இருந்து தப்பிவிட்டதாக நேற்றிரவு வெளியான தகவல்களை பொலீஸார் மறுத்திருக்கின்றனர்.

சிறைச்சாலையின் தீவிர பாதுகாப்புப் பிரிவில் சுமார் 500கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்கள் சிறைக்குள் திடீரென கலகத்தை ஆரம்பித்துள்ளபோதிலும், அவர்களது நோக்கம் என்ன என்பது தெரியவில்லை என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றிரவு இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சிறைச்சாலைக்குள் இருந்து பணயக்கைதிகள் மீட்கப்படவில்லை. சிறைச்சாலைப் பிரதேசம் எங்கும் வேட்டொலிகள் கேட்டபடி இருந்தன. (ஐ-6-9)

## சமாதானக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக தேரர், மௌலவி ஏ.எம்.எம். காசிம், அருட்திரு.ஒஸ்வல்ட் பி.பேர்த், கடம்ப கணநாதன், நாடகக் கலைஞர் பேரம் ஆகியோரே புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்தனர்.

இவர்களின் தலைமையில் 46பேர் அடங்கிய சமாதானக் குழுவினரே யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். (ஐ-ரி)

# இலங்கை அகதிகளைக் கட்டாயமாக அழைத்துச் செல்லும் எண்ணம் இல்லை

## வாலாஜா அகதிகள் முகாமில் அமைச்சர் ஜயலத்

சென்னை,ஜூலை1

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை கட்டாயமாக அழைத்துச் செல்லும் எண்ணம் எமக்கு இல்லை. தாயகம் திரும்பும் இலங்கை அகதிகளுக்குச் சமஅந்தஸ்து அளிக்கப்படும் எனப் புனர்வாழ்வு, மீள் குடியமர்வு அகதிகள் விவகார அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தமிழகத்தில் தெரிவித்தார்.

வாலாஜா பாலாறு அணைக்கட்டுப் பகுதியிலுள்ள இலங்கை அகதிகள் முகாமுக்குச் சென்று பார்வையிட்டபோதே அமைச்சர் ஜயலத் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கை அகதிகள் மத்தியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் எதிர்க்கட்சி எம்.பியாக இருந்தபோது இலங்கை இனப்பிரச்சினை பற்றிப் பேசி வந்தமையால் என்னை விடுதலைப் புலிகளின் உளவாளி என்று கூறினர். எனினும் பிரதமர் என்மேல் நம்பிக்கை வைத்து எனக்கு இந்தப் பொறுப்பை அளித்துள்ளார். இலங்கை அரசுக்கு யுத்தத்தின்மீது நம்பிக்கை கிடையாது.

எல்லோரும் அமைதியைத்தான் விரும்புகிறார்கள். இந்த அமைதிப் பேச்சுகளுக்கு இந்திய அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்கிறோம். உடன்படிக்கைக்குப் பின்னரும் தாயகம் திரும்பும் இலங்கைத் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் ஆகியோர் சமஅந்தஸ்துடன் நடத்தப்படுவார்கள்.

இலங்கை இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. இதன் முதற்படியாக விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் தேசிய அரசியலில் பங்கேற்கவேண்டும் என இலங்கை அரசு விரும்புகிறது.

எனது அகதிகள் முகாம் விஜயத்தின் நோக்கம் அகதிகளின் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமென்பதேயாகும். இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை வலுக்கட்டாயமாக அழைத்துச்செல்லும் எண்ணம் எமக்கு இல்லை.

இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை நான் பார்ப்பது இது கடைசி முறையல்ல. பிரச்சினைகளைத் தீர்க்க நான் அடிக்கடி இம்முகாம்களுக்கு விஜயம் செய்வேன். இந்திய அரசு, தமிழக அரசு அளிக்கும் கல்விச் சான்றுகளுக்கு இலங்கை அரசு அங்கீகாரம் அளிக்கும். இதன் காரணமாகப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி பாதிக்காது. இது சம்பந்தமாகத் தமிழக முதல்வர் இலங்கைப் பிரதமருடன் பேச்சு நடத்தியுள்ளார் என்றும் அமைச்சர் ஜயலத் அங்கு கூறினார். வாலாஜா முகாமில் 350 குடும்பங்களைச் சேர்ந்த 1178பேர் தங்கியுள்ளனர். (எ)

## இலங்கை மாணவர்களுக்கு நோர்வே புகழாரம்!

ஒஸ்லோ,ஜூலை1

நோர்வேயிலுள்ள இலங்கை மாணவர்கள் அந்நாட்டு மாணவர்களை விட உயர்கல்வியில் பிரகாசிக்கின்றார்கள் என்று நோர்வே புள்ளி விவரப் பணியகம் தெரிவித்திருக்கிறது.

நோர்வேயில் 19 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்ட நோர்வேக்காரர்கள் தொகையில் 26சதவீதமானவர்கள் உயர்கல்விக்குத் தகுதி பெறுகிறார்கள். ஆனால், அதே வயதுக்குட்பட்ட இலங்கை மாணவர்கள் 48.7 சதவீதமானவர்கள் உயர்கல்விக்குத் தகுதிபெறுகிறார்கள்.

ஜேர்மன் மாணவர்கள் 37.8 சதவீதமும், வியட்னாமியர்கள் 37.1 சதவீதமும், இந்தியர்கள் 33சதவீதமும் உயர்கல்விக்குத் தகுதி பெறுகிறார்கள் என்று மேற்படி புள்ளி விவரப் பணியகம் அறிவித்துள்ளது. (எ)

## தீவகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானங்கள் எடுக்கப்பட்டன.

அரசியல் பணிக்குழுவின் அலுவலகம் ஒன்று நாளை வேலணையில் திறந்து வைக்கப்படும்.

இதேவேளை -

புலிகளின் மற்றோர் அலுவலகம் நாளைமறுதினம் சண்டிலிப்பாயில திறந்து வைக்கப்படவுள்ளது. (ஐ)

## விசாரணை அறிக்கை

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவுகளின்போது ஏற்பட்ட ஊழல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்டிருந்த குழுவினர் தமது அறிக்கையை எதிர்வரும் 5ஆம் திகதி அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் குண்டுகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு சந்தேகம் தெரிவித்துள்ளது. (ஐ-6)

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இடங்களுக்குச் சென்று அதிகாரிகளைச் சந்தித்து பிரதேச நிலைமை பற்றி பேச்சு நடத்துவர்.

தற்போதைய நிலைமை அமைதியான நிலைமைக்குத் திரும்புவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வது விடுதலைப் புலிகளினதும் தமிழ்த் தலைவர்களினதும் தார்மீகக் கடமையாகும். முஸ்லிம்கள் அமைதிகாக்க வேண்டும். பொறுமை கொள்ளவேண்டும். தமிழ் - முஸ்லிம் உறவுகள் மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டும். இத்தகைய துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெற அனுமதிக்கக்கூடாது.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற கலவரங்களால் பாதிக்கப்பட்டோருக்கு முழுமையான இழப்பீடு வழங்கும் உறுதிமொழியை பிரதமர் ரணில் வழங்கினார். பாதிக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் குறித்து மதிப்பீடு மேற்கொள்ள அதிகாரிகள் குழு நாளை வாழைச்சேனைக்கு விஜயம் செய்யும் - இவ்வாறு அவர் கூறினார். (ஐ-6-9)


ENGLISH
Spoken and Grammar
புதிய பிரிவு ஆரம்பம்
By: BRITTO
காலம் : 03.07.2002 (புதன்)
நேரம் : மாலை 5.00 (ப.நே.)
இடம் : கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
வகுப்புகள்: திங்கள், புதன் 5 மணி
(5353)

SUBRA (14)
சித்தன்கேணி.
பௌதிகவியல் 2003 A/L
திரு.ஜெயம்
அலகு - வெப்பவியல்
ஆரம்பம்: 03.07.2002
Mon., Tue., Fri. - 6-7a.m.
இணைந்த கணிதம்
திரு.A.பத்மநாதன்
Tue., Thu. - 6.30-7.30
Paper Class
ஆரம்பம் - 04.07.2002 (Thu - 6.30)
(C/22731)

உங்களுக்காக
"பிறிண்டிங் வேலைகள் எத்தனையோ அத்தனையும் அழகாய் செய்திடுங்கள்"
ஓவ்செற் பிறிண்டிங், றோனியோ பிறிண்டிங், ஸ்கிறீன் பிறிண்டிங், லேசர் பிறிண்டிங் ரைப்செற்றிங் முதலான அனைத்து அச்சுவேலைகளின் மூலம் உங்களின் ஆக்கங்களை வடிவமைத்திடுங்கள்.
சக்தி
ஓவ்செற் பிறின்ரேஸ்
169,இராமநாதன் வீதி பரமேஸ்வராச்சந்தி திருநெல்வேலி
விசேட விலைக்கழிவு மூலம் தற்போதுள்ள கட்டணத்தைவிட குறைந்த செலவில் மிக நேர்த்தியான முறையில் ஆய்வுக்கட்டுரைகளை பைண்டிங் செய்து கொள்ளலாம்.
வந்துள்ளோம் நாங்கள்

OXFORD INSTITUTE
K.K.S. ROAD, CHUNNAKAM.
பேசும் சிங்களமும் இலக்கணமும்
விரிவுரையாளர்: திரு.லீலாகிருஷ்ணன்
வகுப்பு ஆரம்பம் - 02.07.2002
செவ்., வியாழன் - 9.30 (புதிய நேரம்)
(5328)

Spoken English With Grammar
Lectures By
Mr.M.A.HARI
• புதிய பிரிவு ஆரம்பம் •
02.07.2002 செவ்வாய்
மாலை 5 மணி
Tuesday / Thursday } 5 p.m. - 6 p.m.
Director,
HARY'S INSTITUTE
Kondavil East, Kondavil.
(5435)

RAW
றோ
மிக விரைவில்
விற்பனைக்கு
வருகிறது.
(C/22723)

கண்ணீர் அஞ்சலி
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவர்
திரு.K.S.நடராசா
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆலய பரிபாலன சபை,
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்.
(C/22758)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.